15

# THE TAMILIAN SYSTEM OF MARRIAGE

By

Professor MAYILAI SIVA MUTHU

**C. AMBALAVANAN**

*SECRETARY,*

PRETORIA TAMIL LEAGUE

**PRETORIA**

**(Republic of South Africa)**

## மணமக்கள் மகிழ்ச்சி

யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.

— குறுந்தொகை

## The Joy of the Bridal Couple

Yayum Yayum yar agiyaro
Enthaiyum Nunthaiyum Emmurai kelir
Yanum niyum evvazhi arithum
Sembulap peyal nir pola
Anbudai nenjam tam kalanthanave.

— *Kurunthogai*

It is not known who our mothers are;
How are our fathers related to each other?
How do you and I know each other?
Even as the rain water falling on a red soil
Becomes red in colour
Loving hearts mingled together.

# THE TAMILIAN SYSTEM OF MARRIAGE

By

Professor MAYILAI SIVA MUTHU

C. AMBALAVANAN
*SECRETARY,*
PRETORIA TAMIL LEAGUE
PRETORIA
(Republic of South Africa)

First Edition — 1974

Copyright :
MANAVAR MANRAM, MADRAS (India)

Copyright :
C. AMBALAVANAN,
Secretary, Pretoria Tamil League,
PRETORIA (Republic of South Africa)

Printed at WARDHA PRESS, Chintadripet, Madras-2 (S. India)

# முன்னுரை

திருமணம் என்பது வாழ்வின் திருப்பு முனையாகும். அன்பால் ஒன்றுபட்ட ஆண்மகனும் பெண்மகளும் மனம் கலந்து வாழும் இல்லற வாழ்வின் இனிய தொடக்கமே திருமணமாகும். மணத்தல் என்னும் சொல் கலத்தல், கூடுதல், அஃதாவது அன்பால் ஒன்றுபடுதல் என்று பொருள் தரும் அழகிய சொல்லாகும்.

பண்டைக் காலத்தில் ஒருவனும் ஒருத்தியும் தமமுள் எதிர்ப்பட்டு அன்பால் மனம் இயைந்து வாழத் தொடங்குவர். அது 'களவு மணம்' எனப்பட்டது. அவர்கள் அன்புடைமையை அறிந்த பெற்றோர்கள் பின்பு ஊர் அறிய, உறவினர்கள் அறிய அவர்கட்கு மணம் செய்து வைப்பர். இது 'கற்பு மணம்' எனப்பட்டது. இவ்விருவகை மணமும் தமிழர்க்கு உரியன என்பதை நிலைநாட்டவே தமிழ்த் தெய்வமாகிய முருகப்பெருமான் 'கற்பு நெறி'யில் தெய்வயானையையும், களவு நெறியில் வள்ளியையும் மணந்து வழிகாட்டினார். காலப்போக்கில் களவு நெறியில் ஏற்பட்ட இடையூறுகளால் அது கைவிடப்பட்டது. கற்பு நெறியே சிறந்ததாக மேற்கொள்ளப்பட்டு, அதற்கும் சில சடங்கு முறைகள் வகுக்கப்பட்டன.

பழந்தமிழர்கள் மேற்கொண்டொழுகிய மணமுறை எத்தகையது என்பதனைச் சங்க இலக்கியங்கள் குறிப்பாக உணர்த்துகின்றன. அகநானூறு என்னும் அரிய இலக்கியத்தில் இரண்டு பாடல்களில் தமிழ்த் திருமண முறை விளக்கப்பட்டுள்ளது. அவற்றில் கூறப்பட்ட முறை பின்வருமாறு:

திருமணம் நிகழவிருக்கும் இல்லத்தைத் தூய்மைசெய்து, பந்தரிட்டு அலங்கரிப்பர். பழைய மணலை மாற்றிப் புது

மணல் பரப்புவர். மங்கலத் தன்மை வாய்ந்த மகளிர் ஐவர் கூடி ஒரு பாத்திரத்தில் புது நீர் நிறைத்து, அதில் நெல்லும் மலரும் இட்டு, அந்நீரால் மணமகளை நீராட்டுவர். திரு மணத்திற்குரிய முக்கியமான சடங்கு இதுவே ஆகும். பின் னர் விருந்து நடைபெறும். உற்றார் உறவினர் அனைவரும் விருந்துண்டு மகிழ்ந்து மணமக்களை வாழ்த்துவர்.

இவ்வளவே பழந்தமிழர் மேற்கொண்டொழுகிய திரு மண முறையாகும். திருமணத்தில் மங்கல நாண் (தாலி) அணியும் வழக்கம்கூடப் பண்டு இருந்ததாகத் தெரியவில்லை. நாளடைவில் இம் மணமுறை சிறிது சிறிதாக விரிவடைந் தது. இத் திருமண முறையினுல் கணவன் மனைவியர் தம் இல்லற வாழ்க்கையில் ஏற்பட்ட சில சிக்கல்கள், இடையூறு கள் ஆகியவையே அதற்குக் காரணம். திருமணம் புரிந்து கொண்ட கணவன் மனைவியர் இருவரும் எந்நிலையிலும் ஒரு வரை விட்டு ஒருவர் பிரியாமல் இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொண்டு வாழ வகை செய்வதற்காகவே பிற்காலத்தில் பல சடங்கு முறைகள் தோன்றின.

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

என்று தொல்காப்பியம் இவ்வுண்மையை விளக்குகிறது. காப்பு கட்டுதல், எரியோம்புதல், மங்கல நாண் அணிதல், மணமகன் மணகளின் கைப்பற்றி மணவறையை வலம் வரு தல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் முதலிய மணச் சடங்குகள் நாளடைவில் வளர்ந்த முறையைச் சிலப்பதி காரம், இராமாயணம், திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களால் உணரலாம்.

இக்காலத்தில் திருமண முறை அறிவுக்கு ஒவ்வாத மூடப் பழக்கவழக்கங்களை உடையதாய், மணமக்களுக்குப் புரியாத வேற்று மொழியில் மந்திரங்களைச் சொல்லி நடத்தப் படுவ தாய் அமைந்துள்ளது. அதைக்கண்டு நம் பழந்தமிழ் நெறி

•யைக் காக்க மறைமலையடிகளார், தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார், பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார், மணி. திருநாவுக்கரசர், பேராசிரியர் மயிலை சிவமுத்து முதலிய சான்றோர்கள் கூடி ஆராய்ந்து அறிவுக்கு ஒத்த, மண வாழ்க்கைக்கு இன்றியமையாத சடங்குகளை வகுத்து, மணமக்களுக்குப் புரியக்கூடிய வகையில் தமிழ் மொழியிலேயே மந்திரமான தேவார, திருவாசகப் பாடல்களை ஓதி மணம் செய்து வைக்கும் 'தமிழ்த் திருமண முறை'யை உருவாக்கினர். அம்முறையில் தமிழ்நெறிக் காவலர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் பல்லாயிரக்கணக்கான தமிழ்த் திருமணங்களை நடத்தி வழிகாட்டினார். மற்றையவர்களும் அம் முறையில் திருமணம் செய்துவைக்கப் பயன்படும் வகையில் அத் தமிழ்த் திருமண முறையை அழகிய நூல் வடிவில் சென்னை மாணவர் மன்றம் வெளியிட்டுள்ளது.

அண்மையில் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த பிரிட்டோரியா தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திரு. அம்பலவாணன் அவர்கள் மன்றத்திற்கு வந்து எங்களைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தார். அச் சங்கத்தின் சார்பில் தென்னாப்பிரிக்காவில் வாழும் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படும் வகையில் மன்ற வெளியீடான 'தமிழ்த் திருமண முறை'யை வெளியிட வேண்டும் என்று விரும்பினார். தமிழ்நெறிக் காவலர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் 'தமிழ்த் திருமண முறை' கடல் கடந்து அயல்நாட்டிலும் பரவ ஒரு வாய்ப்பு ஏற்படுவதறிந்து நாங்கள் அளவிலா மகிழ்ச்சியுடன் அவர் விருப்பத்தை நிறைவேற்ற முன்வந்தோம்.

தென்னாப்பிரிக்கத் தமிழ் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டால் பெரிதும் உதவியாக இருக்கும் என்று அவர் விரும்பினார். சென்னை மாணவர் மன்றத் துணைத் தலைவரும், தமிழக அரசின் முன்னைய தலைமை மொழிபெயர்ப்பாளரும், எம் ஆருயிர் நண்பரும், ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் பெரும்புலமைச் செல்வரும் ஆகிய உயர்திரு. வல்லை. பாலசுப்பிரமணியம், பி. ஏ.

அவர்கள் சிறந்த முறையில் இத் 'தமிழ்த் திருமண முறை'யை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உதவினர்.

'தமிழ்த் திருமண முறை' என்ற இந்த நூல தமிழா பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் இன்றியமையாத மணச் சடங்குகள், அவற்றைச் செய்யும் முறை, அப்போது மந்திரப் பாடல்களாகப் பாடவேண்டிய தேவாரம், திருவாசகம் முதலிய நூற்பாடல்கள் ஆகியவற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் அமைத்து வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்ப் பாடல்களை அப்படியே ஆங்கில எழுத்துக்களில் வெளியிட்டுள்ளோம். திருமணத்தில் பாடும்போது தமிழ்ப் பாடல்களாகவே இருக்கவேண்டும். அவற்றின் கருத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லுதல் கூடாது. ஆதலால் இம்முறை கையாளப்பட்டது. அவற்றின் கருத்தை ஆங்காங்கு அழகிய ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து அளித்துள்ளோம். இம்முறை தென்னாப்பிரிக்கத் தமிழ் மக்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகின்றோம்.

இந்த அழகிய நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட இசைந்து முன்வந்த வர்தா அச்சகத்தாருடைய உதவி பாராட்டத் தக்கது.

சென்னை மாணவர் மன்றத்திற்கு உரிமையான இந் நூலைத் தென் ஆப்பிரிக்கத் தமிழருக்குப் பயன்படும் வகையில் ஆங்கில மொழிபெயர்ப்பையும் இணைத்து வெளியிடத் தென் ஆப்பிரிக்கா பிரிட்டோரியாத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. அம்பலவாணன் அவர்கட்கு உரிமை தரப்பட்டுள்ளது. திரு. அம்பலவாணன் அவர்கள் ஆங்கிலத்தில் சில முக்கிய கருத்துக்களை விளக்கி இந்நூலில் சேர்த்திருக்கிறார். அவருடைய ஆராய்ச்சித் திறமை மிகவும் போற்றத்தக்கது. அவர் தமிழர்களுக்குச் செய்யும் நல்ல பணிக்கு இறைவன் நல்லருள் புரிவானாக! மற்றவர்கள் மன்றத்தின் இசைவு பெறாமல் இந்நூலை வெளியிடுதல் கூடாது என்பதனையும் அறிவித்துக் கொள்கின்றோம்.

இந்நூல் வெளிவரத் துணை புரிந்த அனைவர்க்கும் மன்றச் சார்பில் நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்கின்றேன். இம் முயற்சி தென்னுப்பிரிக்கத் தமிழரோடு மன்றத்தின் தொண்டுகளை இணைக்கும் கன்னி முயற்சியாகும். இம் முயற்சி மேலும் பல துறைகளிலும் வளர்ந்து மன்றத்தின் தொண்டு தமிழ்ப் பெருங்குடி மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கட்கெல்லாம் பயன்பட அருள் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனின் பொன்னடிகளை மன மொழி மெய்களால் வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

'சிவமுத்து நிலையம்'
12, வேங்கட ஐயர் தெரு,
சென்னை-1.
21—4—1974

**புலவர் கோ. வில்வபதி,**
தலைவர்,
மாணவர் மன்றம், சென்னை.

# FOREWORD

Marriage is the turning point in one's life. Wedding day is the commencement of the happy period of married life of a young man and woman, having been drawn to each other mentally and physically by force of love. *'Thiru Manam'*—the Tamil equivalent of 'Matrimony'—is a beautiful word denoting coming together, that is, being united by love.

In the days of yore, a teen-age boy and a girl, who met each other by accident, would live together if they liked each other. This was called *'Kalavu Manam'* (களவு மணம்). When the parents of this loving young couple came to know of their real attachment to each other, they will unite the boy and the girl in lawful wedlock, in the presence of relatives and people of the locality. This was called *'Karpu Manam'* (கற்பு மணம்). It was perhaps to show that the ancient Tamilians were familiar with these two kinds of wedding, that *Murugan,* the Tamilian God, married *'Deivayanai'* (தெய்வயானை) by *'Karpu Manam'* and *Valli* (வள்ளி) by *'Kalavu Manam'* and thus showed the way to mankind in this respect.

With the passage of time, *'Kalavu Manam'* used to bristle with difficulties and hidden dangers, and therefore it was given up. *'Karpu Manam'* was accepted as the better of the two, and certain rites and rituals were prescribed therefor.

The books of *'Sangam'* (சங்கம்) literature delineate in detail the system of marriage adopted by the ancient Tamilians. A descriptive portrayal of the Tamilian system of marriage is given in two verses of *'Agananuru'* (அக

நானூறு)—a rare collection of poems of exquisite beauty. The procedure found in them is as follows:

The house selected for the celebration of the marriage is cleansed and decorated with a pandal *(பந்தல்)*. Dirty sand is removed and fresh sand is spread. Five auspicious women (*Sumangalis* i.e. married women having living husbands) together fill a vessel with fresh water, put paddy and flowers therein, and bathe the bride with that water. This alone was the important ritual of the marriage. Then there would be feast. All the relatives and friends would partake of the feast, enjoy the occasion and bless the bridal couple.

This was all the system of marriage followed by the ancient Tamilians. Even the custom of tying the *thali* *(தாலி)* seems not to be in vogue in olden days. With the passage of time this system of marriage gradually expanded. The reason is not far to seek. This system involved certain inextricable problems and impediments in the domestic life of the husband and wife. In order that a husband and wife united in wedlock do not part company under any circumstance but live in unison in joy as well as in sorrow, certain rituals were introduced in later days. This is evident from the following aphorism of *Tolkappiam* *(தொல்காப்பியம்)*.

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

*Poyyum vazhuvum tondria pinnar*
*Ayyar yathanar karanam enba* *(Karpiyal)*

The tying of kanganam, raising the sacred fire, the tying of thali *(தாலி)*, the bridegroom taking hold of the hand of the bride and circumambulating the bridal chamber, treading on the *ammi* *(அம்மி மிதித்தல்)*, pointing ***Arundati*** *(அருந்ததி காட்டல்)* etc., etc.—how all these **wedding**

rituals came into vogue one by one from time to time, can be learnt from such standard works as *Silappadikaram, Kamba Ramayanam* and *Tiruvilayadal Puranam*.

Nowadays, wedding rites consist of superstitious customs which do not appeal to reason and the language employed in doing the rites is not understood by the bridal couple. Some Tamil savants became intolerant of this sorry state of affairs and rose in revolt against them; they were determined to preserve the ancient Tamilian code of ethics in matters pertaining to marriage. The savants were such eminent persons as T. V. Kalyanasundara Mudaliyar, Marai Malai Adigal, C. R. Namasivaya Mudaliyar, Mani Tirunavukkarasu Mudaliyar and Mayilai Siva Muthu. They gathered together in a series of conferences and evolved a Tamilian system of marriage, which, in essence, contained the following virtues: the wedding rites appealed to commonsense; the rituals were such as to impart into the bridal couple the significance of conjugal life; the chantings recited during the performance of the rites were taken from Thevaram, Thiruvasagam etc. which could be understood by the parties to the wedding. Mayilai Siva Muthu, one of the savants mentioned above and the founder of the Manavar Manram, Madras, had himself led this reformation movement by performing thousands of marriages in the new line. And in order that those willing to adopt this system may be benefited, the Manavar Manram brought out a handy and nice brochure entitled: *"The Tamilian System of Marriage"*.

Quite recently, Thiru Ambalavanan, Secretary, Pretoria Tamil Sangam, South Africa, paid a visit to the Manram and had dialogues with us, in the course of which he expressed a desire that the Manram booklet on the *"The Tamilian System of Marriage"* may be republished under

the auspices of his Sangam, in a way useful to the large Tamilian population resident in South Africa. As this presented an opportunity for the spread of Siva Muthu's Tamilian system of marriage overseas among the Tamilians of South Africa, we readily consented to comply with Thiru Ambalavanan's request. He also pointed out that it would be very useful to the South African Tamilians if an English translation is appended. My devoted friend Thiru Vallai Balasubramaniam, formerly Senior Translator to the Government of Tamil Nadu, South India, currently Vice President, Manavar Manram, and an erudite scholar both in English and Tamil, has given an easy, readable and excellent English Translation of the booklet, for which act of kindness, we are grateful to him.

This booklet, among other things, mentions the indispensable wedding rites in consistence with the culture of the Tamilians, tells how to perform them, and gives both in Tamil and English the Thevaram, Thiruvasagam etc. songs which are to be sung as chanting of *mantras* (மந்திரங்கள்) on appropriate occasions. We have given the Tamil songs in Roman English alphabets; but when recited during marriage ceremonies, Tamil version songs alone must be sung. Their meanings should not be translated into English. Hence this procedure. In addition to transliteration, the purport of Tamil songs has also been given in flowing English. I believe that the South African Tamilians will find this arrangement very useful.

Worthy of our laudations are the Wardha Printers, Madras, who readily consented to print this useful booklet in an attractive manner. Our thanks are due to them.

All rights regarding this booklet are vested in the Manavar Manram, Madras. Right has however been granted to Thiru. Ambalavanan, Secretary, Pretoria Tamil

Sangam, South Africa, to republish this booklet with English translation to suit the convenience of the South African Tamilians. We make it known to the public that others should not, on any account, publish this booklet without obtaining the previous consent of Manavar Manram.

A word here about the zeal of Thiru Ambalavanan will not be out of place. He has appended to this booklet a brief explanation in English of certain important points. This shows his innate faculty to do research work, which is worthy of our praise. May the All Merciful God bless him for his invaluable services to the Tamilians.

In conclusion, on behalf of Manavar Manram, I heartily thank all those who helped to bring out this book. This venture is the maiden link in the chain which is to connect the noble activities of Manavar Manram with the South African Tamilians. This venture must expand in many more spheres; and thereby, the useful work of Manavar Manram must reach the great Tamilian race in whatever nook and corner of the world they happen to live. This is my humble and sincere prayer to the Almighty!

'Siva Muthu Nilayam'
12, Venkata Iyer Street,
Madras-1. (South India)
21—4—1974

**Vidwan G. Vilvapathi,**
President,
Manavar Manram, Madras.

# பதிப்புரை

தற்போது தென் ஆப்பிரிக்கா பல துறைகளில் மறு மலர்ச்சி அடைந்து வருகிறது. பற்பல துறைகளில் சீர்திருத்தம் முகிழ்த்து வருகிறது. அறிவிலே புரட்சி, வாழ்க்கையிலே புரட்சி ஏற்பட்டு வருகிறது. இந்நிலை மேன்மேல் வளர வேண்டும். இத்தகைய புரட்சிகளில் ஒன்றுதான் இன்று நடைபெறும் தமிழ்த் திருமணம். தற்காலத்தே பேரறிஞர் அண்ணு அவர்களின் அரிய முயற்சியிஞல் இத்தகைய திரு மணங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கவை என்ற நிலை ஏற்பட்டிருப்பது தமிழர்களின் பெருமிதத்துக்குரியது.

**சிவமுத்துவும் தமிழர் திருமணமும்**

இத் திருமணம் தென் ஆப்பிரிக்கா நாட்டிற்குப் புதியதன்று. பழந் தமிழர் மேற்கொண்டு வாழ்ந்த மணமுறையில் மக்கள் மன நிலைக்கு ஏற்பச் சிற்சில மாறுதல்களை அமைத்து அறிவுடைப் பெருமக்கள் பலர் கூடி ஆய்ந்தமைத்த தாகும். எண்ணற்ற தமிழ்த் திருமணங்களைச் செய்து வைத்துத் தமிழ் உணர்வு பரப்பி வந்தவர் நம் பெரும் புலவர் **மயிலை சிவமுத்து** அவர்கள். இந்நெறி வளர அவர் ஆற்றிய தியாகங்கள் அளவிலடங்காதன.

**ஏன் சீர்திருத்தம் வேண்டும்?**

மணம் என்பதற்குக் கூடுதல் என்பது பொருள். அன்பால் பிணைக்கப்பட்ட இருவர் உள்ளங்கள் ஒன்று கூடுவதையே மணம் என்று கொண்டோம். பண்டைக் காலத்தில் வாழ்ந்த தமிழ் மகனும் தமிழ் மகளும் ஒருவரை ஒருவர் நேரிற்கண்டு பழகி மன ஒற்றுமை உடையவரான பின்பே அவர்தம் பெற்றோர்கள் அவர்க்குத் திருமணம் செய்து வைப்பது வழக்கம். அத்திருமணமும் மிகச் சுருங்கிய முறையில்

சிக்கனமாகவே நடைபெறும். அன்பினுல் பிணைக்கப்பட்ட மணமக்கள் இருவரும் இல்லறமென்னும் நல்லறம் ஏற்று வாழ்க்கை தொடங்குகிருர்கள் என்பதை அறிவிக்கவே மணச் சடங்குகள் நடைபெற்றன.

சான்ருேர்கள் வகுத்த அம்முறைகளைப் பின்பற்றிப் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் ஆயிரக் கணக்கான திருமணங்களை நடத்தி நல்வழி காட்டியுள்ளார். அம் முறை களை அனைவரும் அறிந்து பிறர் உதவியின்றித் தாங்களே திருமணங்களை நடத்தத் துணையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூலை வெளியிட விரும்பினேம்.

இந்நூலைச் செம்மையான முறையில் அச்சிடப் பேருதவி யாக இருந்த சென்னை மாணவர் மன்றத் தலைவர் புலவர் திரு. கோ. வில்வபதி அவர்கட்கும், செயலாளர்கள் புலவர் திரு. தணிகை உலகநாதன், புலவர் திரு. மி. ச. நடேசன் ஆகியோருக்கும் எனது நன்றி உரியது.

**வாழ்க மணமக்கள் !**

இங்ஙனம்,

**கு. அம்பலவாணன்,**

செயலாளர்,

பிரிட்டோரியா தமிழ்ச் சங்கம்,

தென் ஆப்பிரிக்கா.

# EDITORIAL NOTE

At present, South Africa is developing afresh in many spheres. There has been multi-sided improvement. Revolution is seen in ideas as well as in life. This state of affairs must be given a fillip. One of such revolutions is the Tamilian system of marriage, which is current today.

This system of marriage is not new to South Africa. This was the system adopted by the ancient Tamilians in their daily life. A conference of scholars has made some changes therein to suit modern man's thinking.

**Why reform ?**

'Manam' (*மணம்*) means coming together. This is the joining of two persons bound by love. In ancient Tamil country, a young man and a woman met each other by Divine Dispensation, courted and were mentally united. Only thereafter their parents come into the picture and solemnized their wedding. This was the custom followed in ancient days. This wedding too was brief and economic. The wedding rites are mainly intended to convey the idea

that two persons already united by the bond of love are about to enter family life.

This system deserves to be widely propagated. People must be able to solemnize marriages without outside help.. It is with this intention that I venture to publish this brochure.

In this venture of mine, I was amply helped by Pulavar G. Vilvapathi, President and Pulavar Thanigai Ulaganathan and Pulavar M. S. Natesan, Secretaries, Manavar Manram, Madras. I thank them heartily for their help.

C. AMBALAVANAN,
*Secretary,*
*Pretoria Tamil League,*
*Republic of South Africa.*

# பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் நிகழ்த்திய தமிழ்த் திருமண முறை

——::——

தமிழ்த் திருமணம் கடவுட் கொள்கையோடு கூடியது. மணம் செய்துகொள்வோர் பிற்கால வாழ்க்கையிலே தம்முடைய கடமையை உணர்ந்து நல்வழியிலே நடத்தல் வேண்டும் என்பதே இத் திருமணத்தின் முதல் நோக்கம். ஆதலால் திருமணத்தில் செய்யும் சடங்குகளின் பொருளைச் செய்விப்போரும் செய்துகொள்வோரும் உடனிருப்போரும் புரிந்துகொள்ளத்தக்க முறையிலே இந்தத் தமிழ்த் திருமணம் அமைக்கப் பெற்றுள்ளது. எனவே இத் திருமணத்தை நடத்தி வைப்போர் அங்குக் குழுமியுள்ள மக்களுக்கும் மணம் செய்துகொள்ளும் மணமக்களுக்கும் அவ்வப்போது விளக்கிக் கூறுதல் வேண்டும். அங்ஙனம் கூறத்தக்கவைகளுள் கீழ் வருபவை இன்றியமையாதனவாகும்:-

1. மணமகன் வீட்டார், மணமகள் வீட்டார் அழைப்பிதழ்களைத் திருமண மன்றத்தில் கூடியுள்ள பெரியோர்களுக்குப் படித்துக் காட்டுதல்.

2. வரவேற்பவர், மணமக்களின் பெற்றோர் முதலியவர்களின் பெயர்களைப் படித்துக் காட்டிக் கூடுமானால் அவர்களையும் அறிமுகப்படுத்துதல் நலம்.

3. மணமகன், மணமகள் ஆகிய இருவரையும் ஆங்குக் குழுமியுள்ளவருக்கு அறிமுகப்படுத்துதல்.

4. மணமக்களின் எண்ணம் அறிந்துகொள்ளும் வகையில் இந்தத் தமிழ்த் திருமணத்தைக் குறித்தும் திருமணம் செய்துகொள்ள வேண்டிய கடமையைக் குறித்தும், மணமக்களுக்குச் சுருக்கமாக விளக்கிக் கூறுதல்.

திருமணம் செய்துகொள்வோர்க்கு அவரவர் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவகையில் இந்தத் திருமணத்தை நடத்துதல் நலம்.

# தமிழ்த் திருமணம் நிகழ்த்தும் முறை

அவரவர் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப, மணப்பந்தலை மலர் மாலைகளாலும் பல்வேறு விளக்குகளாலும் அழகு படுத்துமாறு செய்தல் வேண்டும். குத்துவிளக்கு, குடவிளக்கு, கிளைவிளக்கு, கைவிளக்கு முதலியவைகளுள் ஒன்றினை அவரவர்கட்கு இயைந்த வகையில் ஏற்றி வைக்கலாம். சிலர் வர்ணம் தீட்டிய மட்கலங்கள், மர உரல் முதலியவைகளை மணப்பந்தலில் வைப்பினும் ஆசிரியர் அவைகளை ஏற்றுக் கொள்ளலாம். மரபுக்கு மாறுபடாத வகையில் குறைந்தது இரண்டு குத்துவிளக்குகளேனும் இருத்தல் வேண்டும்.

மணப்பந்தலில் மணமக்கள் கிழக்கு நோக்கியும் மணம் செய்து வைக்கும் ஆசிரியர் வடக்கு நோக்கியும் அமர்ந்திருத்தல் தமிழ் நாட்டு மக்களின் வழக்கமாக இருத்தலின், இதனையே அனைவரும் மேற்கொள்ளலாம்.

ஒரு தலைவாழையிலையை மணமக்களுக்கு முன்புறமாக (அதாவது கிழக்குத் திசையில்) வைத்து, அவ்வாழை இலையில் மூன்று பிடி பச்சரிசி பரப்பி வைத்து, அதன்மீது வாழைப் பூ வடிவிலமைந்த ஒரு செம்பினை மஞ்சள் குங்குமங்களால் அலங்கரித்து வைத்தல் வேண்டும். பின்பு அச்செம்பில் தூய்மையான நீர்வார்த்து, மாவிலைக் கொத்தினைப் பொருத்தி, அதன்மீது முற்றிய தேங்காய் ஒன்றினை மஞ்சள் பூசிக் குங்குமம் இட்டு வைத்தல் வேண்டும். அச் செம்பினுக்குப் பக்கத்தில் அரைத்த மஞ்சளைப் பிடித்துவைத்து, அதைக் குங்குமத்தால் அலங்கரித்தல் வேண்டும். செம்பினுக்கு மற்றொரு பக்கத்தில் ஒரு தட்டில் மஞ்சள் கலந்த பச்சரிசியைப் பரப்பி, அதன்மீது முற்றிய தேங்காய் ஒன்றினை வைத்து, அதனையும் மஞ்சள் குங்குமங்களால் அலங்கரித்துப் பொற்றாலியோடு கூடிய மஞ்சள் கயிற்றை அதில் சுற்றி வைத்தல் வேண்டும். மணமக்களுக்கு முன்னர் இரண்டு முக்காலிகள் இட்டு மணமகனுக்காகவும் மணமகளுக்காகவும் பெற்றோர்கள் பரிசாகத் தரும் புத்தாடைகளும் மலர் மாலைகளும் நிரம்பிய தட்டுகளை வைத்தல் வேண்டும்.

இறை வணக்கம் முடிந்த பின்னர், மணப்பந்தலில் குழுமி யுள்ள அன்பர்களிடம் அப்புத்தாடைகளை வாழ்த்தித் தருமாறு கேட்டு அவர்கள் வாழ்த்தினைப் பெற்று மணமக்கட்கு அப்புத்தாடைகளை அளித்தல் வேண்டும்.

புத்தாடையுடன் மணமகனும் மணமகளும் மணப் பந்தலுக்கு வந்ததும், அவரவர் மரபுக்குத் தக்கபடி இறைவழி பாட்டினை முடித்துக் கொண்டு மணமக்கள் மணமேடையில் வந்து அமர வேண்டும்.

மணமகன் மணமகளுக்கு மங்கல நாண் அணியும் வரையில் மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்தில் இருத்தல் மரபு என்பதனை ஒட்டி அவ்வாறு இருக்கச் செய்யலாம். இம் மங்கல நிகழ்ச்சி முடிந்ததும் மணமகளை மணமகனுக்கு இடப் பக்கத்தில் அமரச் செய்யலாம்.

மஞ்சளால் பிடித்து வைக்கப்பட்டுள்ளதை அருவமென்றும் உருவமென்றும் சொல்ல இயலாத கந்தழிக் கடவுள் வடிவமென்றும், நீர் நிரம்பிய செம்பின்மேல் தேங்காயோடு விளங்கும் வடிவத்தினை இறைவன் அம்மை அப்பனாக இருக்கும் வடிவமென்றும், குடவிளக்கு, கிளைவிளக்கு முதலியவைகள் இறைவன் ஒளி வடிவமாக விளங்கும் நிலையினைக் குறிப்பன என்றும் மறைமலை அடிகளார் தெரிவித்துள்ள கருத்தின்படி மணமக்கள் இம் மூன்று வகையாலும் இறைவனை வணங்குவார்கள்.

சமித்துகள் கொண்டு செய்யும் எரியோம்புதலும் இவ் வழிபாடுகளுள் தலை சிறந்த ஒன்றாக விளங்குதல் வேண்டும்.

புத்தாடை அணிந்து வந்த மணமக்கள் முதலில் பெற்றோர் வழிபாடு செய்து, அவர்தம் நல்வாழ்த்தினைப் பெற்று எரியோம்பும் செயலால் ஒளி வடிவில் கடவுளை வணங்குவர். செந்தீயோம்புதலால் கடவுளை வழிபடும் போது தேவார, திருவாசகங்கள், தமிழ் மறையாகிய திருக் குறள் இவைகளுள் அவரவர் விருப்பத்திற்கு ஏற்ற வண்ணம் தகுதி வாய்ந்த பாடல்களைத் திருமணம் நிகழ்த்தும் ஆசிரியர் உளங்கனிந்து பாடுதல் வேண்டும். (அங்ஙனம் பாடுதற்

குரிய பாடல்கள் இந்நூலில் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன, இவ் வழிபாடு முடிந்ததும் குழுமியுள்ள பெரியோர்களால் வாழ்த்தித் தரப்பெற்ற மங்கலநாணை மணமகன் மணமகளுக்கு அணிவித்தல் வேண்டும். அப்பொழுது இன்னிசை முழக்கமும் ''மணமக்கள் வாழ்க! மணமக்கள் வாழ்க!'' என்று அன்பர்களின் வாழ்த்துதலும், மஞ்சள் கலந்த அரிசியும், மலரும் தூவுதலும் நிகழும்.

பின்னர் மணமக்கள் மாலை மாற்றிக் கொள்ளவேண்டும். ஒருவருக் கொருவர் தம் மாலைகளை மூன்று முறை மாற்றிக் கொள்வதால் மணமக்களின் மன ஒருமைப் பாட்டினை மக்கள் அறிந்து கொள்கின்றனர். மாலை மாற்றுதல் முடிந்தபின்னர், மணமகன் தன் வாழ்க்கைத் துணைவியின் கையைப் பிடித்துக் கொண்டு மணப்பந்தலைச் சுற்றி வருதல் வேண்டும். மாலை மாற்றுதலும் மணமகளைக் கைப்பிடித்து வலம் வருதலும் தமிழ்த் திருமணத்திற்கு இன்றியமையாதனவாக உள்ளன. அன்றியும் மணமக்களின் உடன்பாட்டினை அங்குக் குழுமியுள்ளோர் அறிந்து கொள்வதற்கும் சிறந்த சான்ருக விளங்குகின்றன. இச் செயல்களோடு திருமணம் முடிவு பெறுகின்றது. பின்னர்த் திருமணம் செய்து வைத்த ஆசிரியரும் ஆன்ரேர்களும் சான்ரேர்களும் மணமக்களுக்கு இல்வாழ்க்கையின் சிறப்பினை எடுத்துக் கூறி வாழ்த்துவர்.

## காப்புக் கட்டுதலும் களைதலும்

**குறிப்பு :** தமிழ்த் திருமணம் மிகவும் சிக்கன முறையில் ஒரே வேளையில் நிகழுமாறு அமைந்திருப்பதால், காப்புக் கட்டல் காப்புக்களைதல், அரசாணிக்கால் நடுதல் முதலியன தேவை இல்லை. இவைகளையும் மண நிகழ்ச்சியில் சேர்த்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்பவர்களுக்குப் பின் வருமாறு செய்தல் வேண்டும்:-

**காப்புக் கட்டுதல் :** ஒரு தட்டிலே மஞ்சள் கலந்த அரிசியைப் பரப்பி வைத்து அதன்மீது மஞ்சள் குங்குமங்களால் அலங்கரிக்கப்பட்ட தேங்காயை வைத்து அந்தத் தட்டினை மணமகனுக்கு முன்ஞல் வைக்கப்பட்டிருக்கும் முக்காலியின்

மேல் வைத்தல் வேண்டும். மணமகன் வலக்கையினை அந்தத் தேங்காயின் மீது வைத்தபடி இருக்க, முழுமஞ்சள் கட்டப் பெற்ற நூல் கயிற்றினை மணமகன் கையில் கட்டுதல் வேண்டும். அதன் பின்னர் மணமகள் தன் இடக்கையை அந்தத் தேங்காயின்மேல் வைக்க, மணமகன் மஞ்சள் கட்டிய நூலினை மணமகள் கையில் கட்டுதல் வேண்டும். அதே சமயத்தில் அவர்களுக்கு எதிர்ப்புறத்தில் நடப்பெற்றுள்ள அரச மரக் கிளைக்கும் மஞ்சள் நூல் கயிறு ஒன்று கட்டுதல் வேண்டும்.

**காப்புக்களைதல் :** திருமணம் முடிந்தபின்னர்க் காப்புக் கட்டிய அதே முறையில் மணமகனை மஞ்சள் பூசிய தேங்காயின்மேல் கையை வைக்கச் செய்து, முன்பு கட்டிய மஞ்சள் நூல் கயிற்றினை அவிழ்த்திடச் செய்தல் வேண்டும். அந்த நேரத்திலேயே அரசங்கிளையில் கட்டிய மஞ்சள் கயிற்றினையும் அவிழ்த்து விடுதல் வேண்டும். இந்நிகழ்ச்சிகளின்போது தும்மல், இருமல் முதலியன கேளாமல் இருத்தற் பொருட்டு மேளம் கொட்டுதல் வழக்கம்.

**பந்தற்கால் நடுதல் :** தமிழ்த் திருமணம் செய்துகொள்பவர்கள் இந்தச் சடங்கைச் செய்வதற்கு ஆசிரியர் உதவியை நாட வேண்டியதில்லை. மங்கல மகளிர் ஐவர் ஒன்றுகூடிப் பந்தற் கால்களுள் வடகிழக்கு மூலையில் நடவேண்டிய ஒன்றுக்கு மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு மலர் சூடி மேளதாள முழக்கத்துடன் தங்கள் கைகளால் அந்தக் கம்பத்தைக் குழியில் நடலாம். ஆசிரியரும் உடனிருந்து நிகழ்த்த வேண்டுமென்று விரும்பினால் ஆசிரியரையும் வைத்துக் கொள்ளலாம். ஆசிரியர் இறைவழிபாடு செய்து மஞ்சள் கலந்த அரிசியைப் பரப்பிய தலை வாழையிலையின் மீது கலசம் நிறுத்தி, அந்தக் கலசத்திற்கு வழிபாடாற்றிக் கலசத்திலுள்ள நீரினைக் கொண்டு பந்தற்காலினைக் கழுவும்படி செய்வர். இந்த நிகழ்ச்சியை அவரவர் பழக்க வழக்கங்களுக்கு ஏற்பப் பெரியோர் கருத்தறிந்து செய்தல் நலம்.

**உறுதி செய்தல் :** இது திருமணம் நிகழ்வதற்கு முன்னர் மணமகள் வீட்டில் நிகழும் நிகழ்ச்சியாகும். மணமகனுக்கு

உரியோரும் மணமகளுக்கு உரியோரும் ஒரு நல்ல நாளில் உற்ருர் உறவினர் முன்னிலையில் ஒருவருக்கொருவர் உறுதி கூறிக் கொள்வது மரபு. பெண்வீட்டார் தம் பெண்ணைக் குறித்த ஒரு மணமகனுக்குத் தருவதாகவும் அவ்வாறே அம் மணமகன் வீட்டார் மணமகனுக்கு வாழ்க்கைத் துணைவி யாகக் குறித்த ஒரு பெண்ணை ஏற்றுக் கொள்வதாகவும் ஒரு வர்க்கொருவர் எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாக வும் ஆசிரியர் முன்னிலையில் சுற்றத்தார்கள் நண்பர்கள் சான் ருக விளங்க உறுதி செய்துகொள்ள வேண்டும்.

## திருமணம் செய்யத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்கள்

1. மஞ்சள் பொடி
2. குங்குமம், திருநீறு
3. சந்தனம்
4. பூச்சரம் 10 முழம்
5. வெற்றிலை பாக்கு
6. வாழைப்பழம்-மூன்று
7. தேங்காய்-மூன்று
8. கற்பூரம்
9. சாம்பிராணி
10. ஊதுவத்தி
11. தலைவாழையிலை-மூன்று
12. பச்சரிசி-ஒரு படி
13. மாவிலைக்கொத்து
14. குத்துவிளக்கு-இரண்டு
15. திரிநூல்
16. நூல்கண்டு
17. நெய்
18. நெற்பொரி
19. பூமாலை
20. பொற்றாலி
21. மணமக்களுக்குப் புத்தாடை
22. சமித்து
23. மோதிரம்
24. மங்கல் வாத்தியம்
25. பெரிய தட்டு-இரண்டு
26. சிறிய தட்டு-ஒன்று
27. ஆசனப் பலகை-இரண்டு
28. வெல்லம்
29. செம்பு-இரண்டு
30. முக்காலி
31. முழுமஞ்சள்-மூன்று

## தமிழ்த் திருமண நிகழ்ச்சிகள்

1. இறைவழிபாடு
2. கால் நடுதல்
3. கும்ப பூசை
4. மணமக்களுக்கு ஆடை வழங்குதல்
5. காப்பு அணிதல்
6. பெற்றோர் வழிபாடு
7. மகட் கொடை நேர்தல்
8. செந்தீ வேட்டல்
9. மங்கல நாண் வழிபாடு
10. மணமக்கள் உறுதி மொழி
11. மங்கல நாண் அணிதல்
12. பொட்டு இடுதல்
13. மாலை மாற்றல்
14. பட்டம் கட்டுதல்
15. மணமக்கள் செந்தீ வலம் வருதல்
16. வாழ்த்துரை
17. கண்ணேறு கழித்தல்
18. மணமக்கள் மணவறையைவிட்டு எழுந்து வேற்றிடஞ் சென்று அமர்தல், பால் பழம் உண்டல்
19. காப்புக் களைதல்

## Some noteworthy points about the
# TAMILIAN SYSTEM OF MARRIAGE

——::——

The Tamilian system of marriage is intentioned with belief in God. The prime motive of this marriage is that the parties to the marriage must realize their duties in their conjugal life and lead a path of virtue. The procedure of the Tamilian system of marriage is, therefore, so designed that the solemnizers, parties and invitees to the marriage understand the several rites performed during the marriage ceremony. Hence, the officiator of this marriage must explain certain points to those present on the occasion and the bridal couple. The most important of such points are:

1. The invitations on behalf of the bride and the bridegroom should be read out to those present at the wedding.

2. The person who welcomes the gathering should read out the names of the parents of the bridal couple and, if possible, introduce them to the audience.

3. The bridal couple should be introduced to the audience.

4. In order to establish the thought currents of the bridal couple, this Tamilian system of marriage and the necessity of a married life must be briefly explained to them.

### Procedure of Celebrating the Marriage

Marriage pandal *(பந்தல்)* or hall must be decorated with flower garlands and different kinds of lights. According to one's means, Kuthu Vilakku *(குத்து விளக்கு)*, Kuda

Vilakku *(குட விளக்கு)*, Kilai Vilakku *(கிளை விளக்கு)* or Kai Vilakku *(கை விளக்கு)* may be lighted. Some may place painted potteries and wooden mortars; the officiator may permit them. There must be atleast two kuthu vilakkus, so that tradition is not violated.

In the marriage pandal, the bridal couple should face East and the officiator should face North. This is usual with our people; this may be adopted by all.

A full plantain leaf should be spread (eastwards) before the bridal couple; three handfulls of raw rice should be spread on the leaf; a bronze *Chembu (செம்பு)* decorated with turmeric paste and red powder *(குங்குமம்)* must be placed on the rice; the *chembu* must then be filled with pure water; a cluster of mango leaves must be inserted, a ripe coconut must be placed on it; the coconut must be smeared with turmeric paste and *Kumkum (குங்குமம்)*. Besides the *Chembu*, wet turmeric powder must be put into conical shape and *Kumkum* must be applied to it. On the other side of the Chembu, there must be a pan in which raw rice mixed with turmeric should be spread; a ripe coconut must be placed thereon; it should be besmeared with turmeric and *Kumkum*; the golden *thali (தாலி)* tied in yellow thread must surround the coconut. Two tripods *(முக்காலிகள்)* must be placed before the bridal couple and on them should be kept the pans containing new clothes and flower garlands.

After prayer, the new clothes must be sent round the gathering for them to touch and bless. The clothes are then given to the bridal couple for them to don.

After the bridal couple return to the marriage *pandal* donned in new clothes, invocation songs for divine blessings

must be sung, and the bridal couple should sit on the marriage dais.

Until the bridegroom ties *thali (தாலி)* to the bride, it is usual that she should be on his right side; thereafter, she must be made to sit on his left side.

Now, certain esoteric meanings may be explained. The cone shaped wet turmeric powder indicates God who is with or without form. The water filled *Chembu* with coconut on it, means that God manifests Himself as Father and Mother. The several lamps indicate that God's form is glow. The bridal couple worship God in these three ways.

The raising of fire by burning sacred twigs *(சமித்துகள்)* must be the best one of these kinds of worship.

The bridal couple, returning donned with new clothes, must pay respects to their respective parents and obtain their blessings; then, by raising the sacred fire, they worship God with glow like form. When worshipping God by raising the sacred fire, the officiator must sing songs from Thevaram *(தேவாரம்)* Thiruvasagam *(திருவாசகம்)* and Thirukural *(திருக்குறள்)*. The songs are printed in this brochure in proper places. After this invocation, the sacred thread blessed by the elders—must be tied to the bride by the bridegroom. At that juncture, the instrumental music Nathasvaram must be sounded; those gathered will say aloud: "Long live the bridal couple"; rice and flowers mixed with turmeric powder must be sprayed.

The bridal couple must then exchange garlands. As they thus exchange garlands thrice, the audience come to know of their mental accord. After the exchange of garlands, the bridegroom takes hold of his wife's hand and walks round the marriage pandal. The exchange of garlands and the *saptapati* (that is, the bridegroom walking

round the pandal holding the bride's hand) are indispensable to a Tamilian system of marriage, since, by these acts, the audience come to know about the mutual consent of the bridal couple. With this, the wedding ceremony comes to a close. Thereafter, the solemnizer and elderly people will bless the couple, at the same time pointing out the glory of married life.

### Tying Kanganam (காப்புக் கட்டுதல்)

Rice mixed with turmeric must be spread on a pan; a coconut decorated with turmeric and *Kumkum* must be placed on the spread rice; this pan must be kept on the tripod in front of the bridegroom. The bridegroom must place his right hand on the coconut; while being so, the officiator *(ஆசிரியர்)* must take a cord dipped in turmeric solution with a turmeric attached and tie it on the right hand of the bridegroom. Then, the bride must place her left hand on the coconut; the bridegroom must tie a similar cord on her left hand. At the same time, three *Sumangalis* (married women having living husbands) must tie a thread dipped in turmeric to a *arasu* tree branch *(அரசமரக்கிளை)* planted in front of the bridal couple. This ceremony signifies that the bridal couple swear that they will, till the completion of the wedding rites, be true, honest and steadfast.

After the completion of the wedding, the above process is reversed. That is, the bridegroom must place his right hand on the coconut and the officiator must untie the *Kanganam*; the bride places her left hand on the coconut and the bridegroom unties the *Kanganam*. At the same time, the yellow cord attached to the *arasu* tree branch must be untied. At this time, instrumental music is played in high pitch, so that sounds of sneezing and cough may not be audible.

## Programme of Tamilian System of Marriage

1. Prayer
2. Arasani ceremony
3. Kalasa puja
4. Giving new clothes
5. Tying of Kanganam
6. Offering respects to parents
7. Giving away of the bride to the bridegroom
8. Raising the sacred fire
9. Offering worship to the sacred *thali*
10. Declarations of the bridal couple
11. Tying of the sacred *thali*
12. Applying *tilak (பொட்டு)* in the forehead
13. Exchange of garlands
14. Tying of pattam *(பட்டம்)*
15. The bridal couple going round the sacred fire (Saptapati)
16. Blessings by the elders
17. Obviating evil eyes (influences) *(திருஷ்டி கழித்தல்)*
18. The bridal couple raising from the bridal seat, sitting elsewhere and taking in milk and fruits
19. Untying of Kanganam.

# தமிழ்த் திருமண முறை

## தமிழ்த் திருமண நிகழ்ச்சிகளும் பொருத்தமான மந்திரப் பாடல்களும்

## (Proceedings of the Tamilian system of wedding, and sacred songs to be sung on suitable occasions)

### 1. இறைவழிபாடு (Prayer)

*மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து விளக்கேற்றி வைத்தல். ஆசிரியர் வடக்கு நோக்கி அமர்ந்து மணமகனை அழைத்துக் கிழக்கு நோக்கி அமரச் செய்தல். ஆசிரியர் பின்வரும் திருப்பாடலைப் பாடிக்கொண்டு மஞ்சள் கலந்த அரிசி, உதிரிமலர் ஆகியவற்றை மணமகன் கையில் கொடுத்துப் பிள்ளையாரை வழிபடச் செய்தல்.*

Here Vigneswara is worshipped, so that he may obviate all obstacles to the wedding and help in the happy fruition of the wedding.

Turmeric Pillaiyar to be installed; lamps to be lighted. The officiator sitting facing North, to ask the bridegroom to sit facing East. The officiator singing the following song, gives turmeric mixed rice and flowers to the bridegroom and asks him to worship Pillaiyar:

*பிடியதன் உருவுமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்*
*கடிகண பதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.*

Pidiyathan Uru Umai Kola migu Kariyathu
Vadikodu tanatadi Vazhipadum avaridar
Kadi Ganapati vara arulinan migu Kodai
vadivinar payil valivalam Urai Iraiye. —*Sambandar*

## 2. கால்நடுதல் (Arasani Ceremony)

அரசங்கிளை அல்லது ஆலங்கிளை ஒன்றினை மங்கல அணி அணிந்த மகளிர் மூவருடனும் மணமக்களுடனும் நடுதல். ஆசிரியர் பின்வரும் பாடலை ஓதிக்கொண்டு கால்களுக்கு மஞ்சள், குங்குமம் இட்டுத் துணி கட்டச் செய்தல்.

Three sumangalis (married women having living husbands) along with the bridal couple planting a *arasu* or *al* branch. The officiator, singing the following song, asks them to adorn the branches with turmeric and *Kumkum* and new clothes.

மாவேலை ஆலமதை அடக்கித் தன்னுள்
    மண்ணுலகம் அண்டமெலாம் வளர்ந்துதானோர்
காவேயின் முன்னுதித்த அரசிற் றோன்றிக்
    கடம்புபுனை குருந்தினுக்குத் துணைய தாகித்
தூவேதந் தலைகாண்டற்கு அரிய தாகித்
    துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர் வெய்யில்
ஆவேனைத் தன்னடியாம் நிழலிற் சேர்த்த
    அத்திதனைப் பத்தி செய்து முத்தி சேர்வாம்.

Mavelai alamatai adakki tannul
    mannulagam andamelam valarndu tanor
Kaveyin munnuditta arasil tondri
    Kadambu punai kurundinukku tunaiyadagi
tooveta talai Kandarku ariatagi
    tunbamuru piraviyenun tugal ser veyyil
Avenai tannadiyam nizhalil serta
    attitanai patti seitu mutti servam.

## 3. கும்ப பூசை (Kalasa Puja)

வாழையிலையில் அரிசியிட்டு இரண்டு கும்பங்களில் தண்ணீர் நிறைத்துப் பெரிய கும்பத்தை வலப்பக்கத்திலும் சிறிய கும்பத்தை இடப்பக்கத்திலும் வைத்துக் கும்பங்களை

இறைவன இறைவியாக நினைத்துத் தூப தீபங் காட்டி ஆசிரியர் பின்வரும் பாடல்களை ஓதிக்கொண்டு மணமக்களை வழிபாடு ஆற்றும்படி செய்தல்.

Rice to be spread on a plantain leaf; two Kalasams to be filled with water; the larger to be placed on the right and the smaller on the left; they must be treated as God and Goddess; benzoin to be put in fire; camphor to be lit; officiator must sing the following songs, and ask the bridal couple to worship:

**இறை வழிபாடு (வலப்பக்கக் கும்ப வழிபாடு) :**

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர்
பொருளாய் வேறும்
குறியது உடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங்கு
அறிவினில் அருளால் மன்னி அம்மையோடு அப்பனாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

**Prayer to God (right side Kalasam):**

Aruvagai samayattorkkum avvavar porulai veram
Kuriyatu udaittai vedagamangalin Kuriyirandu angu
Arivinil arulal manni *Ammaiyodu Appan* agi
Serivozhiyadu ninra Sivan Adi Senni vaippam.
—*Arulnandi Sivam*

Ulagelam unarnthu Otharkariyavan
Nila vulavia nirmali venian
Alagil sothian Ambalattu Aduvan
Malar silambadi vazhthi vananguam. —*Sekkizhar*

**இறைவி வழிபாடு (இடப்பக்கக் கும்ப வழிபாடு):**

தையல்நல் லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நோக்கும் மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவமினி மேவ கிலாவே.

**Prayer to Goddess (left side Kalasam):**

Thaiyal Nallalai tavathin talaiviyai
Maiyalai nokkum Manonmani Mangaiyai
Paiya ninretti panimin, panintha pin
Veyya bavam ini mevagillave. —*Tirumantiram*

## 4. மணமக்களுக்கு ஆடை வழங்குதல் (Presentation of new clothes to the bridal couple)

**மணமகனுக்கு ஆடை அளித்தல்:**

ஒரு தட்டில் புத்தாடை, பூ, வெற்றிலைபாக்கு இவைகளை வைத்து ஆசிரியர் பின்வரும் திருப்பாடலை ஓதிக்கொண்டு மணமகனுக்குத் தருதல்.

**Presentation of new clothes to the bridegroom:**

New clothes, flowers, betel leaves and nuts are placed on a pan. The officiator, singing the following song, presents them to the bridegroom:

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
    போக முந்திரு வும்புணர்ப் பானைப்,
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்,
    பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை,
இன்ன தன்மையன் என்றறி வொண்ணு
    எம்மா னைஎளி வந்த பிரானை,
அன்னம் வைகும் வயல்பழ னத்தணி
    ஆரு ரானை மறக்கலு மாமே.

Ponnum meipporulum taruvanai,
  Bogamum Turuvum punarppanai,
Pinnai en pizhaiyai poruppanai
  Pizhaiyelam tavira panippanai,
Inna tanmaiyan enrarivonna
  Emmanai elivanta piranai,
Annam vaigum vayal pazhnattu ani
  Aruranai marakkalum ame. —*Sundarar*

**மணமகளுக்கு ஆடை வழங்குதல்:**

ஆசிரியர் பின்வரும் பாடலை ஓதிக்கொண்டு மணமகளுக்கு ஆடையை அளித்தல்:

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
  சார்வினும் தொண்டர் தருகிலா
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
  புகலூர் பாடுமின் புலவீர்காள்,
இம்மை யேதரும் சோறும் கூறையும்
  ஏத்த லாம்இடர் கெடலுமாம்,
அம்மை யேசிவ லோக மாள்வதற்கு
  யாதும் ஐயுற வில்லையே.

**Presentation of new clothes to the bride:**

The officiator, singing the following song, presents new clothes, flowers etc. to the bride:

Tammaiye pugazhnthu ichchai pesinum
  sarvinum tondar tarugila
Poimaiyalarai padate Enthai
  Pugalur padumin pulavirgal,
Immaiye tarum sorum Kooraiyum
  ettalamidar kedalumam,
Ammaiye Sivalogam alvatharku
  yathum iyuravu illaiye. —*Sundarar*

## 5. காப்பு அணிதல் (Tying of the Kanganam)

ஒரு தட்டில் பச்சரிசி, வெற்றிலே பாக்கு, மஞ்சள் பூசிய தேங்காய், பழம், மஞ்சள் கோக்கப்பட்ட இரண்டு மஞ்சள் நாண் ஆகியவற்றை வைத்தல்.

Raw rice, betel and nuts, coconut besmeared with turmeric, fruits, two turmeric dipped cords with turmeric attached—all these to be placed in a pan.

திருமணம் தடையின்றி இனிது நடைபெறும் பொருட்டு திருவருட்காப்பாக இந் நாணைக் கையில் கட்டுகின்றேன் என்று ஆசிரியர் சொல்லிக் கொண்டு பின்வரும் பாடலே ஓதி மணமகன் வலக்கையில் கட்டுதல்.

The officiator says: "I tie this cord to invoke divine blessings, so that the wedding ceremonies may go on without any impediment." So saying, he sings the following song and ties the cord in the bridegroom's right hand :

**மணமகன் வலக்கையில் கட்டல்:**

ஓர்வரு கண்க ளிணைக்கயலே
உமையவள் கண்கள் இணைக்கயலே
ஏர்மரு வுங்கழ ஞகமதே
எழில்கொளு தாசனஞகமதே
நீர்வரு கொந்தள கங்கையதே
நெடுஞ்சடை மேவிய கங்கையதே
சேர்வரு யோகதி யம்பகனே
சிரபுர மேயதியம்பகனே.

**Tying in the bridegroom's right hand:**

Orvaru Kangal inaikkayale,
Umayaval Kangal inaikkayale,
Ermaruvum Kazhalnagamathe
Ezhil kolu tasana nagamathe

Nirvaru Kontala gangaiyathe
nedum sadai mevia gangaiyathe
Servaru yoga tiyambagane
Sirapuram meya tiyambagane. —*Sambandar*

(In this song, St. Sambandar brings before our vision the form of Siva with Uma on his left and the River Ganges in his matted locks.)

ஆசிரியர் பின்வரும் பாடலை ஓத, மணமகளுக்கு இடக் கையில் மணமகன் காப்புக்கட்டுதல்.

While the officiator further sings the following song, the bridegroom ties the Kanganam in the left hand of the bride:

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

Ainthu Karathanai Anai Mugattanai
Inthin ilampirai polum eyitranai
Nandhi magantanai gnanakkozhuntinai
Punthiyil vaittu adi potruginrene. —*Tirumoolar*

(In this song of Tirumantram, St. Tirumoolar invokes the blessings of God Vigneswara, who is described as five handed and elephant-headed.)

## 6. பெற்றோர் வழிபாடு (Offering respects to parents)

மணமகன் தன் பெற்றோரின் திருவடியைத் தூய நீரால் விளக்கிப் பொட்டிட்டு மலர் தூவிப் பின்வரும் திருப்பாட்டை ஓதிக்கொண்டு வழிபடவேண்டும்.

The bridegroom pours pure water on the feet of his parents, applies sandal paste to them, sprays flowers on

them and sings the following song as if in the act of prayer :

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
　　அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
　　ஒருகுலமும் சுற்றமும் ஒரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
　　துணையாய்என் நெஞ்சம் துரப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
　　இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

**Appan nee, Ammai nee, Ayyanum nee,**
　　**Anbudaia Mamanum Mamiyum nee,**
**Oppudaia Matharum Onnporulum nee,**
　　**Oru kulamum Sutramum ore urum nee,**
**Tuippanavum Uippanavum totruvai nee,**
　　**Tunaiyay en nencham turappippai nee,**
**Ippon nee, im mani nee, im muthum nee,**
　　**Iraivan nee, Erurntha Selvan neeye.**

*—Tirunavukkarasar*

**(In this song St. Tirunavukkarasar considers God Siva as his father, mother, master, loving uncle and aunt and all that is worth having.)**

மணமகள் தன் பெற்றோரின் திருவடியை நீரால் விளக்கி மலர் தூவிப் பின்வரும் திருப்பாடலை ஓதிக்கொண்டு வழிபடுதல்.

**The bride similarly pours pure water on the feet of her parents, applies sandal paste to them, sprays flowers on them and sings the following song as if in the act of prayer :**

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
　　அன்பினில் விளைந்த ஆரமுதே,
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
　　புழுத்தலைப் புலையனேன் தனக்குச்

செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

**Ammaiye, Appa, Oppila maniye,**
**Anbinil vilaintha aramuthe,**
**Poimmaiye perukki pozhutinai churukkum**
**Puzhuttalai pulaiyanen tanakku**
**Semmaiye aya Sivapatam alitha**
**Selvame, Siva Perumane,**
**Immaiye unnai Chikkenep pidithen**
**Engezhuntaruluvatu iniye.** —*Manickavasagar*

**(In this song, St. Manickavasagar similarly, calls God Siva as his mother, father and nectar.)**

## 7. மகட்கொடை நேர்தல் (Giving away of the bride)

மணமகளின் வலக்கையை மணமகனின் வலக்கையின் மேல் வைக்கச் செய்து, மணமகனின் பெற்றோரும், மணமகளின் பெற்றோரும் தத்தம் கைகளையும் மணமக்களின் கைகளோடு மேலும் கீழுமாக வைத்துக்கொள்ளும்படி செய்தல். மணமகளின் பெற்றோர் கையில் வெற்றிலை, பாக்கு, பழம் இவைகளுடன் நீர் வார்த்துக் கொடுத்தல். அப்பொழுது பின் வருமாறு கூறுதல் வேண்டும்.

**The right hand of the bride is placed upon the right hand of the bridegroom. The parents of the bridegroom and of the bride place their respective hands upon and below the hands of the bridal couple. The parents of the bride, keeping in their hands betel leaves, areca-nuts and fruits, pour water as if in the act of giving away of the bride. At that time they say as follows:**

மணமகள் பெற்ருேர் :

.................ல் இருக்கும்..............ஆகிய யான், என் அருமை மகள் திருவளர் செல்வி..............என்ற நங்கையை ..............ல் இருக்கும்..............மகன் திருவளர் செல்வன் ..............க்கு உறவினர், ஆன்ருேர் முதலியவர்கள் சான்ருகத் திருமணம் செய்தளிக்கின்றேன்.

**Parents of the bride:**

I, ....................of....................do hereby, in the presence of elders etc., give away my daughter Selvi................................ in marriage to Selvan.... ..........................................son of Thiru...........................of.............................

மணமகன் பெற்ருேர் :

............ல் இருக்கும்...........ஆகிய யான், என் அருமை மகன் திருவளர் செல்வன்...........க்கு...............ல் இருக்கும் .................மகள் திருவளர் செல்வி..............நங்கையை உறவினர் ஆன்ருேர் முதலியவர்கள் சான்ருகத் திருமணம் செய்து கொள்ள இசைகின்றேன்.

**Parents of the bridegroom:**

I....................of....................do hereby, in the presence of relatives, elders etc., consent to take Selvi.............................. daughter of Thiru..............................of..............................in marriage to my son Selvan..................................

## 8. செந்தீ வேட்டல் (Raising the sacred fire)

இந் நிகழ்ச்சிக்குச் சமித்து, நெய், பொரி, மணல் ஆகியவை வேண்டும்.

Medicated twigs *(சமித்து)*, ghee, fried rice and sand are required for this ceremony.

மணல் பரப்பிச் சமித்தினை இட்டுத் தீ வளர்த்தல். மணமகனைக் கொண்டு செந்தீயில் சுள்ளியும் நெய்யும் இடச் செய்தல். ஆசிரியர் பின் வரும் பாடல்களை ஓதுதல்.

**Sand is spread on the ground, and medicated twigs are placed on it and lit by burning camphor. The bridegroom puts twigs and pours ghee in the fire. The officiator then sings the following song:**

நமச்சிவாய வாஅழ்க ! நாதன்தாள் வாழ்க !
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க !
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க !

ஆடக மதுரை அரசே போற்றி !
கூடல் இலங்கு குருமணி போற்றி !
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி !
இன்றெனக் காரமுது ஆனாய் போற்றி !
மூவா நான்மறை முதல்வா போற்றி !
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி !
மின்னார் உருவ விகிர்தா போற்றி !
கல்நார் உரித்த கனியே போற்றி !
காவாய் கனகக் குன்றே போற்றி !
ஆவா என்றனக்கு அருளாய் போற்றி !
மானேர் நோக்கி மணாளா போற்றி !
வானகத் தமரர் தாயே போற்றி !
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி !
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி !
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி !
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி !
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி !
தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்ட வர்க்கும் இறைவா போற்றி !
போற்றி போற்றி புயங்கப் பெருமான் !

போற்றி போற்றி புராண காரண !
போற்றி போற்றி சயசய போற்றி !

Namasivaya Vazhga ! Nathan thal vazhga !
Imaippozhuthum en nenchil ningathan thal Vazhga !
Kogazhi anda gurumanithan thal vazhga !
Agamam agi ninru annippan thal vazhga !
Egan Anegan Iraivan adi Vazhga !
Adaga Madurai Arase potri !
Kudal ilangu gurumani potri !
Then Tillai manrinul Adi potri !
Inru enakku Aramudhu Anai potri !
Moova nanmarai muthalwa potri !
Sevar velkodi Sivane potri !
Minnar uruva Vigirtha potri !
Kal ner uritta Kaniye potri !
Kavai Kanaga Kunre potri !
Ava enranakku arulai potri !
Maner nokki manala potri !
Vanagattu Amarar thaye potri !
Paridai Ainthai paranthai potri !
Niridai nangai nigazhnthai potri !
Thiyidai moonrai tigazhnthai potri !
Valiyidai Irandai magizhnthai potri !
Veliyidai onrai vilainthai potri !
Thennadu udaiya Sivane potri !
Ennattavarkkum Iraiva potri !
Potri Potri puyanga Peruman !
Potri Potri purana Karana !
Potri Potri jaya jaya potri !!

—*Manickavasagar*

(In these lines St. Manickavasagar enumerates the divine, supernatural, noble and heroic attributes of God Siva and makes salutations to Him.)

**செந்தீ வளர்த்து முடிந்தபின் ஓதுதல் :**

இரு நிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எறியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன்சடை அடிகள் நின்ற வாறே.

**After the ceremony of raising the sacred fire is completed, the following songs are to be sung :**

**Iru nilanai thiyagi neerum agi,**
**Iyamananai eriyum katrum agi,**
**Aru nilaya thingalai Gnayiru agi,**
**Agasamai atta murthi agi,**
**Peru nalamum kutramum pennum anum**
**Pirar uruvum tham uruvum thame agi,**
**Nerunalaiyai Inragi nalai agi,**
**Nimir pun sadai adigal nintravare.**

*—Thirunavukkarasar*

(In this song, St. Tirunavukkarasar considers God Siva as manifesting Himself as land, water, fire, air, ether, sun, moon, good, evil, man, woman, time-past, present and future and what not.)

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தம் மேவியசீர்
ஆதியே யடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்ற ருளாயே.

Sothie Sudare Soozh oli vilakke
    Suri kuzhal Panai mulai madanthai
Pathiye Parane pal kol vennitrai
    Pangayathu Ayanum Mal ariya
Nithie, selva Tirupperunthurayil
    Nirai malar Kurundham mevia seer
Athiye adiyen adarittu azhaittal
    Athentuve enru arulaye. —*Manickavasagar*

(In this song, St. Manickavasagar visualises God Siva as glow, flame, light, having a maiden on his left half, and milk white ash-worn.)

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
    உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
    சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
    அம்பலம் ஆடு அரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து உகந்தாயைத்
    தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Olivalar vilakke, ulappila onre,
    Unarvu Soozh Kadantha thor unarve,
Theli valar palingin tiranmani kunre,
    Sittattul tithikkum tene,
Alivalar ullattu ananda kaniye,
    Ambalam adu arangaga
Velivalar Deiva Kuthu uganthayai
    Tondanen vilambuma vilumbe.

—*Tirumaligai Tevar*

(In this song, poet Tirumaligai Tevar describes God Siva *as bright light; Crystal mountain and as a* blissful fruit.)

## 9. மங்கல நாண் வழிபாடு (Worship of the sacred thread) *(Tali)*

பொன் தாலியில் மஞ்சள் பூசிக் குங்குமம் இட்டு இரு முழ நீளமுள்ள மஞ்சள் பூசிய நாணில் அப் பொன் தாலியைக் கோத்து இரு புறமும் முடியிட்டுத் தட்டில் வைத்து, பூ—வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் மஞ்சள் இவற்றையும் வைத்துக் குழுமியுள்ள சான்றோர் வாழ்த்துக் கூறிக் கைகளால் தொடும் வண்ணம் காண்பித்து வருதல் வேண்டும்.

The golden thali is dipped in turmeric and kumkum. A three feet long turmeric-dipped thread is passed through the eye in the thali, being knotted on both sides to avoid slipping. It is placed on a pan, on which are also placed betel leaves, arecanuts, cocoanut, plantain fruit and turmeric paste. It is taken round and shown to the elders for them to bless by touching with their hands.

மணமகன் மணமகளுக்கு வடக்குப் பக்கத்தில் அமர்தல். மணமகள் வலப்பக்கமும் மணமகன் இடப்பக்கமும் அமர்தல் வேண்டும். அப்பொழுது ஆசிரியர் பின்வரும் பாட்டை ஓத, மங்கல நாண் வழிபாடு நடைபெறும்.

The bridegroom is on the left side of the bride. The officiator then sings the following song, by way of worshipping the thali:

மன்றில்மணி விளக்கு எனலாம் மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணின் ஒளிபோற்றி உலகும்பர்
சென்றுதொழ அருள் சுரக்கும் சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலை போற்றி நிலவுதிரு வடிபோற்றி.

Munril mani vilakku enalam
    Maruvu Muga nagai potri
Onria mangala nanin
    Oli potri ulagumbar

Senru thozha Arul surakkum
  Sivagama Sundaritan
Ninra tiru nilai potri
  Nilavu Tiruvadi potri.

(In this song, among other things, the sacred *thali* of Goddess Sivagama Sundari, the consort of Lord Nataraja of Chidambaram, is praised in glowing terms.)

## 10. மணமக்கள் உறுதிமொழி (The solemn declaration of the bridal couple)

**மணமகன் உறுதிமொழி கூறுதல்:**

பெருமதிப்பிற்குரிய பெரியோர்களே! பேரன்புகெழுமிய உறவினர்களே! உங்கள் அனைவர்க்கும் அன்பு கனிந்த வணக்கம். வாழ்விலோர் திருநாளாகிய இந் நன்னாளில் உங்கள் முன்னிலையில் இப் பெண்ணின் நல்லாளை என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ள மட்டற்ற மகிழ்ச்சி யுடன் இசைகின்றேன். அன்பில் மலர்கின்ற இல்வாழ்க்கை யில் இன்பத்திலும் துன்பத்திலும் இணை பிரியாது வான் புகழ் வள்ளுவர் வகுத்த தெள்ளு தமிழ் நெறியில் நின்று வாழ்வேன் என்று உறுதி கூறுகின்றேன். என் துணைவிக்கு இல்லற வாழ்வில் அளிக்க வேண்டிய உரிமைகளை அளித்து அன்புடன் வாழ்வேன். 'காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்ற ஆன்றோர் மொழியை நினைவிற்கொண்டு என் வாழ்க்கைத் துணைவியுடன் ஒற்றுமை யோடு வாழ்வேன் என்பது உறுதி. எங்கள் இல்லற வாழ்வு பெற்றோரும் பெரியோரும் புகழும் வகையில் இனிது நடை பெற வேண்டுமென்று எங்கும் நிறைந்த இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**The solemn declaration of the bridegroom:**

Respected elders and loving relatives, My humble salutations to all of you. This day is a unique day of

jubilation in my life. I consent with boundless joy to take this good lady as my partner in life in your presence. In the domestic life, which blossoms in love, I will not part with this lady either in joy or sorrow, and I promise to lead the ideal married life as enunciated in Tiruvalluvar's KURAL. I will concede to my partner all the rights pertaining to married life, and will be lovingly devoted to her. "It is blissful if two lovers are mentally united"—so says an old adage. I will always keep this in mind and live united with my partner. This is certain. I pray to God to grant the boon that our married life be such as to invoke the praises of our parents and elders.

**மணமகள் உறுதிமொழி கூறுதல்:**

இங்குக் குழுமியுள்ள பெரியோர்கள் அனைவர்க்கும் வணக்கம். உங்கள் முன்னிலையில் இந் நம்பியை என் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொள்ளப் பெருமகிழ்ச்சியுடன் இசைகின்றேன். என் கணவர் கருத்தறிந்து ஒழுகி இல் வாழ்க்கைக்கு உற்ற துணையாகத் திகழ்வேன். இன்பத்திலும் இன்னலிலும் இணைபிரியாது என் கணவரை மதித்து அவர் இன்பமே என் இன்பம்; அவர் நலமே என் நலம் எனக் கருதி வாழ்வேன் என்று உறுதி கூறுகின்றேன். தமிழ் மறையாம் திருக்குறள் கூறும் இல்லற நெறியில் என் கணவருடன் அன்புடன் இணைந்து வாழ்வேன் என்பது உறுதி. எங்கள் மனையற வாழ்க்கை மகிழ்ச்சி பொங்கச் சிறப்புடன் விளங்க அருள் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**The solemn declaration of the bride:**

My salutations to all the elders assembled here. With great joy, I consent to take this young man as my life-partner in your presence. I will conduct myself according to the wishes of my husband and will be a suitable

helpmate to him. In joy and sorrow I will not be separated from him. I declare that I will so lead my life considering his pleasures as mine and his welfare as that of my welfare. In my married life I will be love-bound with my husband as perscribed in the KURAL—the Tamil scripture. I pray to the Almighty God to bestow His blessings on us, so that joy may prevail in our married life.

## 11. மங்கல நாண் அணிதல் (Tying of the sacred chord)

*1.* மணமகனின் உடன் பிறந்தாள் ஒரு தட்டில் திரு விளக்கேற்றி அதனை மணமகளின் பின்புறம் ஏந்தி நிற்றல் வேண்டும்.

1. The sister of the bridegroom should stand behind the bride with a pan in her hand on which a burning lamp is placed.

*2.* ஆசிரியர் மங்கல நாணை மணமகன் கையில் கொடுத்தல்.

2. The officiator places the sacred chord in the hands of the bridegroom.

*3.* மணமகன் தன் வலக்கை மணமகளின் கழுத்திற்குப் பின்புறமாக அவளது வலப்பக்கம் வரும்படி வளைத்து, மற்றொரு கை இடப்புறத்தில் இருக்க, மங்கல நாணின் இரு புறங்களையும் பற்றித் தாலியின் முகப்பின் முன்புறம் மார்பின் நடுவே விளங்க, கழுத்தில் கட்டி மூன்று முடியிடுதல் வேண்டும். பின் கையெடாமல் திருநீறு, குங்குமம், சந்தனம், மலர் இவற்றை முடியில் வைத்தல் வேண்டும்.

3. The bridegroom must bend his right hand behind the nape of the bride so as to emerge on her right side, keep his other hand to her left, hold the two sides of the

sacred chord in such a way that the front face of the *thali* is just in the middle of her breast, and tie the same in her neck with three knots. Then without removing his hands, he must apply to the knot holy ash, Kumkum, sandal paste and flowers.

மணமகன் மணமகளுக்கு மங்கல நாண் அணியும் பொழுது ஆசிரியர் பின்வரும் பாடல்களை ஓதுதல் வேண்டும்.

Even as the bridegroom ties the sacred chord round the bride's neck, the officiator must sing the following songs :

மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

Mannil nallavannam vazhalam vaigalum
Ennil nalla gadikku yathum ore kuraivillai,
Kannin nallakthurum kazhumala valanagar
Pennin nallalodum perunthagai irunthathe.

—*Sambandar*

(In this song, St. Sambandar says that even as God Siva is in the company of Goddess Parvati, men could live happily in this world; there is no doubt about the good destination of the mankind.)

நன்றுடை யானை தீயதில் லானை நரைவெள்ளேறு
ஒன்றுடை யானை உமையொரு பாகம் உடையானை
சென்றடை யாத திருவுடை யானை சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் உள்ளம் குளிரும்மே.

Nanrudaiyanai, thiyathu illanai, narai velleru
Onrudaiyanai, Umai oru pagam udaiyanai.

Senradaiyatha Thiruvudaiyanai, Chirappalli
Kunrudaiyanai Koora en ullam kulirume.

—*Sambandar*

(In this song, St. Sambandar describes God as being the embodiment of all that is good, bereft of evil, having one white bull, *having Uma on his side* and residing in the Tiruchirappalli Hill. To speak of Him makes one's mind peaceful.)

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவன்இருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

Munnam avanudaiya namam kettal,
Murthi avan Irukkum vannam kettal,
Pinnai Avanudaiya Arur kettal,
Peyarttum Avanukke Pichi anal,
Annaiyaiyum Attanaiyum anre nittal,
Aganral agalidattar Acharattai,
Tannai maranthal tan namam kettal
Thalaippattal Nangai Talaivan tale.

—*Thirunavukkarasar*

(In this song, St. Tirunavukkarasar describes how a beautiful damsel sick with the love of God Siva, first came to know of His name, then visualised His handsome form, came to know of his residence, became mad after him, forsook her father and mother atonce, departed from the way of the world, forgot herself, renounced her own name and finallv became merged with him.)

## 12. பொட்டு இடுதல் (Applying the tilak) *(Pottu)*

மணமகளுக்கு மணமகன் பொட்டு இடுதல். அப்போது ஆசிரியர் பின்வரும் பாடலை ஓதுவார்.

**The bridegroom applies *tilak* in the forehead of the bride. The significance of this ritual, is that the *tilak* applied by her husband should not be effaced by the wife till the end of life. During this ceremony, the officiator sings the following song :**

கலவஞ்சேர் கழிக்கானல் கதிர் முத்தம் கலந்து எங்கும்
அலவஞ் சே ரணை வாரிக் கொணர்ந் தெறியும்
அகன்றுறைவாய்
நிலவஞ்சேர் நுண்ணிடைய நேரிழையா ளவளோடும்
திலகம்சேர் நெற்றியினர் திருவேட்டக் குடியாரே.

**Kalavam ser kazhikkanal**
**Kadir mutham kalanthu engum**
**Alavam ser anai vari**
**Konarndhu eriyum agan thurai vai**
**Nilavam ser nunnidaiya**
**Nerizhaiyal avalodum**
**Tilakam ser natriyinar**
**Tiruvettakkudiyare.** —*Sambandar*

**(In this song, St. Sambandar says that God Siva, with *tilak* in his forehead and Uma by his side, resides in Tiruvettakkudi, a hamlet 5½ miles from Karaikkal in South India.)**

## 13. மாலை மாற்றல் (Exchange of garlands)

மணமகன் தன் கழுத்தில் அணிந்துள்ள மாலையைக் கழற்றி மணமகளுக்குச் சூட்டுதல். மணமகள் தன் கழுத்தில் உள்ள மாலையைக் கழற்றி மணமகனுக்குச் சூட்டுதல். அப்போழுது ஆசிரியர் பின்வரும் பாடல்களை ஓதுவார்.

The bridegroom takes out his garland and puts it on the bride. The bride similarly takes out her garland and puts it on the bridegroom. During this ritual, the officiator sings the following song:

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினை நன்குஅறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவிய ஊர்வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அரிசிலின்தென் கரைமேல்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே.

Kurumbai mulai malar Kuzhali konda tavam kandu
Kurippinodu senravaltan gunattinai nangu arindhu
Virumbu varam Koduttavalai vettaruli seitha
Vinnavarkon Kannutalon mevia oor vinavil
Arumbaruge surumbaruva arupatham pann pada
Ani mayilgal nadamadum Arisilin thenkarai mel
Karumbaruge Karunguvalai Kann valarum Kazhani
Kamalangal muga malarum Kalayanallur Kane.
—*Sundarar*

(In this song, St. Sundarar says that God Siva satisfied with the penance done by Uma, granted her desires and ultimately married her. He resides in Kalayanallur, a city renowned for its scenic beauties and natural surroundings, two miles from Kumbakonam in South India).

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடியாரவர் வான் புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

Enrum inbam'perugum iyalbinal
Onru Kathalittu ullamum Ongida
Manrular adiyaravar Von pugazh
Ninrathengum nilavi ulagelam. —*Sekkizhar*

(In this concluding verse of Periapuranam, Poet Sekkizhar invokes the blessings of God Nataraja of Chidambaram, so that joy and love be widespread and the excellence of the devotees be widely known.)

## 14. பட்டம் கட்டுதல் (Tying of pattam)

மணமகள் மணமகனின் இடப் பக்கத்தில் மாறி அமர்தல் வேண்டும். மணமக்களின் அம்மான்மார்கள் மணமக்களின் நெற்றியில் பட்டம் கட்டுதல். மாமிப் பட்டம், நாத்திப் பட்டம் கட்டுதலும் உண்டு. அப்பொழுது ஆசிரியர் பின் வரும் பாடலைப் பாடுவார்.

The bride sits on the left side of the bridegroom. The maternal uncles of the bridal couple tie pattams in the forehead of the couple. Aunt (mother-in-law) and bridegroom's sisters also tie pattams.

The significance of the bride sitting on the left side of the bridegroom is that like *Artanariswarar*—right man-left woman form of God Siva—the bride and the bridegroom has been inseparably united.

The mother-in-law, by tying pattam to her new daughter-in-law, gives up the management of the family, so far held by her, in favour of her daughter-in-law.

The bridegroom's sister, by tying pattam to her brother's new wife, ensures her co-operation to the new entrant in the house, in the matter of the management of the domestic affairs.

During this ritual, the officiator sings the following song:

பட்ட நெற்றியர் பால்மதிக் கீற்றினர்
நட்டம் ஆடுவர் நள்ளிருள் ஏமமும்
சிட்ட ஞர்தென் பராய்த்துறைச் செல்வஞர்
இட்ட மாயிருப் பாரை அறிவரே.

Patta netriar pal mathi Kitrinar
Nattam aduvar nallirul emamum
Chittanar then Paraitturai Selvanar
Ittama irupparai arivare. —*Tirunavukkarasar*

(In this song, St. Tirunavukkarasar describes God Siva, having his temple in Paraitturai, as having a pattam in his forehead, having a crescent in his matted locks and dancing in the midnight.)

## 15. மணமக்கள் செந்தீ வலம்வருதல் (The bridal couple coming round the sacred fire) *(Saptapati)*

மணமகன் மணமகள் கையைப் பற்றிக் கொள்ள வேண்டும். இதற்குக் 'கைப்பற்றல்' (பாணிக்கிரகணம்) என்பது பெயர். இந்து சமய மணச் சடங்குகளில் இது மிகவும் புனிதமானது. மணமகன் மணமகள் கையைப் பற்றி மணவறையைச் சுற்றிவருதல், இந்து சமயத் திருமணச் சட்டத்தில் இன்றியமையாததாக வற்புறுத்தப்பட்டுள்ளது. இது 'சப்தபதி' (ஏழடி நடத்தல்) எனப்படும். மணமகள், மணமகன் தன் கையைப் பற்றி நடக்க இசைவதால் அவனுடைய இல்லற வாழ்க்கையில் தானும் பங்கேற்று அவனைப் பின் பற்றி இறுதிக்காலம் வரை இயைந்து வாழ இசைவதை இது குறிக்கும். தோழன் முன்னும் தோழி பின்னும் செல்ல, மணமக்கள் ஒரு முறை வலம் வந்து கிழக்கு நோக்கி நிற்றல் வேண்டும். மணமகனின் கைகளின் மேல் மணமகளின் கைகளை வைக்கச் செய்தல். மணமகளின் உடன் பிறந்தான்

பொரியை மணமக்கள் கையில் இடுதல். மணமக்கள் அதைத் தம் கைகளால் மூடி வணங்கிப் பின் அதனைச் செந்தீயில் இடுதல். இவ்வாறு மூன்று முறை வலம் வந்து பொரியிடுதல். அப்பொழுது பின்வரும் பாடலை ஓதுதல் வேண்டும்.

The bridegroom takes hold the hand of the bride. This is called *Panigrahana* and is very important in Hindu sacramental marriage. The *panigrahanam* (taking hold of the hand) and *saptapati* (taking seven steps) signify that the bride, by permitting the bridegroom to take hold of her hand and following his foot-steps round the *manavarai* consents to be his life-partner and follow him in the marital journey. Bridegroom's friend in the fore, then the bridegroom, next the bride, and the bride's maid in the rear—in this order they come round the *manavarai* (bridal seat) once and stand facing the East. The bride places her hands on the hands of the bridegroom. The bride's brother puts the *pori* (பொரி-fried rice) in the hands of the bridal couple. The couple receive the *pori*, close it with their hands and then put it in the burning fire. This process is repeated thrice. During this ritual the officiator sings the following song:

அகன்அமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்று
    ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
    துள்ளிருக்கும் புராணர் கோயில்
தகவுடைநீர் மணித்தலத் துச்சங்குளவர்க்
    கந்திகழச் சலசத் தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
    மணஞ்செய்யும் மிழலை யாமே.

Agan amarntha anbinarai aru pagai setru
    Aymbulanum Adakki gnanam
Pugaludaiyor tammullap pundarigathu
    Ullirukkum Puranar Koil,

Tagavudai nir manittalattu sangula vark
    Kam tigazha salasa tiyul
Migavudaiya pungumalar poriyatta
    Manam seyyum Mizhalaiyame. —*Sambandar*

(In this song, St. Sambandar goes into ecstacy over the beautiful scenes of land and water in Tiruvizhimizhalai, a fertile village in Tanjavur District in South India. There is a lovely pond there with crystal water and red lotus flowers blossom in it. They look like glowing fire. On the bank of the pond pungu trees with white flowers (resembling pori-that is, fried rice) grow in abundance. By a draught of the wind these flowers fall in the red lotus flowers in the pond. This appears like throwing pori in the fire and performing the marriage.)

## 16. மெட்டி இடுதல் (Adorning the finger of the foot with metti)

மணமக்கள் மணவறையைச் சுற்றி முதல் வலம் வந்தவுடன் மணமகன், மணமகளுடைய இரு கால் பெருவிரல்களை அடுத்த இரண்டாவது விரல்களில் வெள்ளியால் செய்யப் பட்ட இரண்டிரண்டு மோதிரங்களை (மெட்டிகள்) அணிவிக்க வேண்டும். மணமகள் தன் வாழ்நாள் முழுதும் மங்கலத்துக்கு அடையாளமாக இம் மெட்டிகளை அணிவது மரபு.

When the bridal couple are on the Northern side of *manavari* when taking the first round, the bridegroom puts two silver rings on each of the fingers next to the toe of the bride.

## 17. அம்மி மிதித்தல் (Placing the foot on ammi)

மணமகன், மணமகள் கையைப் பற்றி மணவறையை வலம் வரும்போது இரண்டாவது சுற்றில் வடகிழக்கு

முனையை அடைந்தவுடன் மணமகளின் வலக்காலை, மணமகன் தன் கையால் பற்றி எடுத்து அங்கு வைக்கப்பட்டுள்ள அம்மியின் மீது வைப்பது மரபு. வாழ்க்கையாகிய கடலில் துன்ப அலைகள் மோதும்போதும் பெரிய பாறைபோல் அசையாமல் அவள் மனவுறுதியுடன் இல்லறமாற்ற வேண்டும் என்பதனைக் கணவன் அவளுக்கு இச் சடங்கின்மூலம் அறிவுறுத்துகிறான் என்பது கருத்து.

When the bridal couple are on the Northern side of the *manavarai* when taking the second round, the bridegroom takes hold of the right leg of the bride with his right hand and places it on the stone *ammi* kept in the North Eastern corner of the *manavarai*. This ritual signifies that the bride should stand foursquare against the ups and downs of the family life, even as a rock stands steadfast against the dashing waves of the sea.

A stone broken into two cannot be put together and made one. This is a warning to the bridal couple against the danger of disunity among themselves.

This ritual is also meant to instil into the mind of the bride the importance of chastity. It brings to her mind the story of Ahalya, wife of Sage Gautama, who when found unfaithful to her husband by having connection with Indra, was cursed to become a stone, by her sage-husband.

## 18. அருந்ததி காட்டல் (Showing star Arundati)

மணமகன், மணமகள் கையைப் பற்றி மணவறையை மூன்றும் முறையாக வலம் வரும்போது வானத்தில் அருந்ததி என்னும் நட்சத்திரத்தை மணமகளுக்குக் காட்டுவது வழக்கம். அருந்ததி வசிட்ட முனிவரின் மனைவி. கற்புக்கே எடுத்துக்காட்டாக விளங்குபவள். கணவன் அதனைத் தன் மனைவிக்குக் காட்டுவதன்மூலம் அவளும் அருந்ததியைப்

போலக் கற்புநெறி காத்து வாழவேண்டும் என்பதனை அறி வுறுத்துகிறான் என்பது கருத்து.

When the bridal couple are on the Northern side of the *manavarai* when taking the third round, the bridegroom shows to the bride a star in the sky, known as Arundati. Arundati, the wife of Sage Vashishta, was renowned for her chastity and unfailing devotion to her husband. This ritual is meant to instil into the mind of the bride, the need for chastity and devotion to her husband.

## 19. மைத்துனருக்கு மரியாதை செய்தல் (Honouring the brother-in-law)

மணமக்கள் மணவறையை மூன்றும் முறையாகச் சுற்றி வந்து முடிந்தவுடன், மணமகன் பொரியிட்ட தன் மைத்துனர் கையில் பொன் மோதிரம் அணிவித்தல் வேண்டும். தன் உடன்பிறந்தவளைத் தனக்கு வாழ்க்கைத் துணைவியாக அளித் துத் தன் இல்லறக் கடமைகளைச் செய்ய உதவியமைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மணமகன் மைத்துனர்க்கு இவ் வாறு மரியாதை செய்தல் வழக்கம்.

When the bridal couple complete the third round of *manavarai* and pour *pori* into the fire, the bridegroom puts a gold ring on the finger of his brother-in-law (bride's brother) in token of gratefulness for having given his sister to him in marriage.

## 20. வாழ்த்துரை (Invoking divine blessing)

ஆசிரியர் மணமக்களை வாழ்த்திப் பின்வரும் திருப்பாடல் களை ஓதுதல்.

The officiator blesses the bridal couple by singing the following songs:

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.

Ariru tadanthol vazhga! Arumugam vazhga! verpai
Kooru sei tanivel vazhga! Kukkudam vazhga! Sevvel
Eria manjai vazhga! Yanai tan anangu vazhga!
Marila Valli vazhga! vazhga seer adiyar ellam.

(In this song, an earnest desire is expressed for the long life of the twelve hands and six heads of God Murugan, His weapon, Vel, His banner, cock, His vehicle, peacock, His consorts, Deivayanai and Valli, and lastly his devotees).

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

Van mugil vazhathu peiga! malivalam surakka! mannan
Kon murai arasu seiga! Kuraiyilathu uyirgal vazhga!
Non marai arangal onga! natravam velvi malga!
Menmai Kol Saiva nithi vilanguga Ulagam ellam.
*—Poet Saiva Ellappa Navalar*

(Let the monsoons be unfailing! Let there be fertility! Let the King's rule be upright! Let all living beings lead a comfortable life! Let the ethics enunciated by the four Vedas prosper! Let good penance and sacrifice thrive! Let the Saiva doctrine spread all over the world!)

## 21. கண்ணேறு கழித்தல் (Obviating the evil eye)

பெரியோர்கள் அரிசி சொரிந்து மணமக்களை வாழ்த்துதல். மங்கல அணியணிந்த மகளிர் ஆலத்தி எடுத்தல்.

Elders bless the bridal couple by spraying rice over them. Water is taken in a wide pan. Lime and turmeric is mixed in the water. Then the water turns into blood red. Woman having living husbands wave this water-contained pan (alatti-ஆலத்தி) before the bridal couple.

## 22. பால்பழம் உண்டல் (Partaking of milk and fruits)

மணமக்கள் மணவறையை விட்டு எழுந்து வேற்றிடம் சென்று அமர்தல். பால்பழம் உண்டல்.

The bridal couple then leave the *manavarai*, enter another room, sit and partake milk and plaintain fruit.

## 23. திருமணத்திற்குப் பிறகு நிகழும் நிகழ்ச்சிகள் (Post wedding rituals)

1. மணமக்கள் திரும்பவும் மணமேடைக்கு வந்து அமர்தல்.

(a) The bridal couple re-enter and take their seats in the *manavarai*.

2. மணமக்களுக்கு அன்பளிப்பு அளித்தல்.

(b) Giving presents to the bridal couple.

3. வாழ்த்துரை கூறல்.

(c) Benedictory speeches.

4. வாழ்த்திதழ் படித்தல்.

(d) Reading of greeting addresses.

5. மணமக்கள் நன்றி கூறல் (அல்லது) பெற்றோர் நன்றி கூறல்.

(e) Vote of thanks by the bridal couple or their parents.

## 24. காப்புக் களைதல் (Untying the Kanganam)

தட்டில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு வைத்து மணமகனை அழைத்து வரச்செய்து, ஆசிரியர் மணமகனின் கையில் கட்டப்பட்டுள்ள காப்புநாணை அவிழ்த்தல். மணமகளை அழைத்து வரச்செய்து மணமகள் கையில் கட்டப்பட்டுள்ள காப்புநாணை மணமகன் அவிழ்த்தல்.

The bridal couple re-enter and take their seats in the manavarai. Coconuts, fruits, betel leaves, arecanuts etc. are placed in a wide pan. The officiator unties the Kanganam from the hand of the bridegroom. The bridegroom unties the Kanganam from the hand of the bride.

## 25. வாழ்த்தி வழங்கல் (Giving the offerings to God to the bridal couple with blessings)

இறைவனுக்குப் படைத்த தேங்காய், பழம் முதலிய வற்றை மணமகனிடம் தந்து மணமகள் கையில் கொடுக்கச் செய்தல். அப்போது பின்வரும் பாடலைப் பாடுதல் வேண்டும்.

The offerings to God, such as coconuts, fruits, betel leaves, arecanuts etc. are taken by the officiator and handed over to the bridegroom, who is in turn asked to hand them over to the bride. During this ritual, the officiator sings the following songs:

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

Mannil Nallavannam Vazhalam, Vaigalum
Ennil Nalla gadhikku yathum ore kuraivilai;

Kannin nallakthurum Kazhumala valanagar
Pennin Nallalodum Perunthagai irunthathe.

—*Sambandar*

(In this song, St. Sambandar says that even as God Siva is in the company of Goddess UMA, men could live happily in this world; there is no doubt about the happy destination of the mankind.)

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

Vazhga anthanar Vanavar aninam;
Veezhga tannpunal; Vendanum Vonguga;
Azhga tiyadu ellam; Aran namame
Suzhaga; vaiyagamum tuyar tirgave. —*Sambandar*

(Long live virtuous savants, celestials and cows! Let monsoons be unfailing! Let the King prosper! Let all bad things perish! Let God's name resound in the air! Let sorrow be wiped out of the world!)

இந்நிகழ்ச்சியுடன் திருமணம் நிறைவுறுகிறது.

With this ritual, the marriage ceremonies come to an happy ending.

# வள்ளுவர் கண்ட காதலர்

# LOVERS AS VISUALIZED BY TIRUVALLUVAR

——::——

1. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.

*Anangu Kol Aymayil Kollo Gananguzhai*
*Mathar Kol malum en nenju.* —*Kural : 1081*

இவள் இச் சோலையில் வாழும் தெய்வமகளோ, சிறந்த மயிலோ, அல்லது மக்கள் இனத்தைச் சேர்ந்த பெண்தானோ; இவள் இன்ன வகையைச் சார்ந்தவள் எனத் துணிந்து சொல்ல முடியாமல் என் மனம் மயங்குகின்றது.

**Meaning:** The maiden I see in this grove—could she be a celestial damsel? Could she be a choice hen? or Could she be a girl belonging to the human species? Her beauty bewilders me so much that I could not determine who she is.

2. இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

*Iru nokku ival unkann ulladhu ; oru nokku*
*Noi nokku ; onran noi marundhu.* —*Kural : 1091*

இவளுடைய மைதீட்டிய கண்களுக்கு இரண்டு வகையான பார்வை இருக்கிறது. அவற்றுள் ஒரு பார்வை நோயை உண்டாக்குவது, மற்றொரு பார்வை அந்நோய்க்கு மருந்து.

**Meaning:** This damsel has two kinds of looks; one kindles uneasiness, the other acts as medicine to that illness.

3. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.

*Ethilar pola pothu nokku nokkuthal*
*Kathalar kanne ula.* —*Kural : 1099*

புறத்தே, அயலார்போல் அன்பில்லாத பொது நோக்கால் நோக்குதல், அகத்தே காதல் கொண்டவரிடம் உள்ள ஓர் இயல்பு ஆகும்.

Meaning: It is the characteristic trait of lovers, loving each other intensely within themselves, to look upon each other to all external appearances as if they are strangers, devoid of love.

4. கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல.

*Kannodu Kann inai nokku okkin, Vai chorkal*
*Enna payanum ila.* —*Kural : 1100*

காதலொடு கூடிய இருவர் கண்களுள் ஒருவர் கண்கள் மற்றொருவரது கண்களை நோக்குமேயானால், அவர்கள் சொல்லக் கூடிய வாய்ச் சொற்களால் ஒரு சிறிதும் பயன் இல்லை.

Meaning: If two pairs of eyes agree and understand betwixt themselves, spoken words are of no avail whatsoever.

5. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள.

*Kandu Kettu undu vuyirthu utrariyum aymbulanum*
*Onnthodi Kanne ula.* —*Kural : 1101*

கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நாவால் சுவைத்தும், மூக்கால் மோந்தும், உடம்பால் தொட்டும் அனுப

விக்கப்படும் ஐம்புல இன்பங்களும் ஒளி பொருந்திய வளைய லணிந்த இவளிடத்தே உள்ளன.

**Meaning**: This damsel wearing bright bangles is a feast to the eyes; a sweet melody to hear; a tasty nectar to the mouth; pleasing odour to breathe; it gives immense pleasure to touch her.

6. தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

*Tammil irundhu tamadhu pathu undatral*
*Amma arivai muyakku.* —*Kural : 1107*

மாநிறமுடைய இவ்வழகிய மங்கையினது சேர்க்கை, தம் வீட்டிலிருந்து தம்முடைய முயற்சியால் வந்த பொருளைத் தமக்கு உரியவர் யாவருக்கும் பகிர்ந்துகொடுத்துத் தாமும் தமக்குரிய பாகத்தை அனுபவிப்பதைப் போன்ற இன்பத்தைத் தருகிறது.

Meaning: Suppose I own a house; there I partake with others the food I have earned by hard labour. What an amount of pleasure I will derive then! The same pleasure I derive when I am having connection with this lady-love of mine.

7. அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

*Aritorum ariyamai Kandatral; Kamam*
*Seritorum Seyizhai mattu.* —*Kural : 1110*

நூல்களை ஊன்றிப் படிக்குந்தோறும் முன்பு இருந்த அறியாமையை உணர்ந்துகொள்வது போன்று, சிறந்த ஆபரணங்களை அணிந்த இவளிடம் சேருந்தோறும் இவள்பால்

உள்ள காதல் புதுமையாய் மேன்மேலும் மிகுந்து இன்பத்தைத் தருகிறது.

Meaning: As we go on learning we realise how ignorant we were so far; even so, every time I am having connection with her, I experience that I am enjoying her afresh.

8. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

*Nanirai Vazhi anichchame ninninum*
*Menniral yam vizhbaval.* —*Kural : 1111*

அனிச்சப்பூவே, நீ எல்லா மலர்களினும் மென்மையான தன்மையைப் பெற்றிருக்கின்றாய். ஆதலின் நீ வாழ்வாயாக. ஆனால் என்னால் விரும்பப்படுகின்றவள் உன்னைக்காட்டிலும் மென்மையான தன்மையுடையவள்.

Meaning: O, Flower Anichcham! No doubt, you are the most delicate of all the flowers. All glory to you! And yet, my lady-love is more delicate than you.

9. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

*Murimeni mutham muruval veri natram*
*Velunn kann veythol avatku.* —*Kural : 1113*

மூங்கில்போலும் தோளினையுடைய இவளுக்கு உடல் தளிர்போன்ற தன்மை வாய்ந்தது. பல் முத்துப்போன்றது. மணம் இயற்கையாக அமைந்த நல்ல மணம். மை தீட்டப் பெற்ற அவள் கண்கள் வேல்போன்று இருக்கும்.

Meaning: My darling's body is like slender leaf; her teeth are comparable to pearls; the good odour about her is natural; her beautiful eyes reminds me of *Vel* (lance).

10. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

*Anichchamum Annathin Thuviyum mathar*
*Adikku nerunji pazham.* —*Kural : 1120*

அனிச்சமலரும் அன்னப் பறவையின் இறகும் ஆகிய இவைகள் இவள் பாதத்திற்கு (முள்ளோடு கூடிய) நெருஞ்சிப் பழம் போன்றவைகள்.

**Meaning:** The feet of my lady-love are so tender that, if they tread even on such soft things as *anichcham* flowers and downs of the swan, they become red and swollen as if they run thorns of *nerunji.*

11. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.

*Palodu then kalanthatre panimozhi*
*Val eyiru uria nir.* —*Kural : 1121*

மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய வெண்மையான பற்களில் ஊறிய நீர் பாலோடு தேன் கலந்தாற் போன்ற சுவையை யுடையதாயிருக்கின்றது.

**Meaning:** The saliva secreting through the white teeth of this soft-worded damsel is as tasty as milk mixed with honey.

12. உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

*Udambodu Uyiridai enna matranna*
*Madathaiyodu Emmidai natpu.* —*Kural : 1122*

இம் மங்கையோடு எமக்குள்ள தொடர்பு உடம்பிற்கும், உயிர்க்கும் உள்ள தொடர்புகள் எப்படியோ அப்படியாகும்.

**Meaning:** The intimacy between myself and this damsel is so close as that between soul and body.

உடம்பும் உயிரும் வேற்றுமையில்லாமல் கலந்திருத்தல் போலவும், இன்ப துன்பங்களைச் சேர்ந்து அனுபவித்தல் போலவும் நாங்கள் இருவரும் வேற்றுமையில்லாமல் இன்ப துன்பங்களைச் சேர்ந்து அனுபவிக்கக்கூடிய அவ்வளவு நெருங்கிய தொடர்பு உடையவராவோம் என்பதாம்.

The significance of the simile is that, as the soul and the body are so closely united that they cannot be differentiated and as they experience joys and sorrows together, so also we, the bridal couple, will be so united that we will take joys and sorrows as one person.

13. கருமணியில் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம்.

*Karu maniyil pavai nee Pothai yam Vizhum*
*Tirunudarkku illai idam.* —*Kural : 1123*

என் கண்ணின் கருமணியிலுள்ள பாவையே! என்னால் விரும்பப்படுகின்ற அழகிய நெற்றியை யுடைய இவள் தங்கி இருப்பதற்கு வேறு இடம் இல்லை. ஆகையால் நீ தங்கி யிருக்கும் அவ்விடத்தைவிட்டு வெளியே வருவாயாக.

Meaning: O, the pupil of my eyes, you just vacate your seat, because there is no other place for my lady-love to be seated.

14. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

*Ezhuthungal Kolkana Kannepol, Kongan*
*Pazhikanen kanda idathu.* —*Kural : 1285*

மை தீட்டப்படும்போது மை தீட்டும் கோலைக் கண் உணராதது போலக் கணவனைக் கண்டபோது, அவரைக் காணுதபோது முனைத்திருந்த குற்றங்களுள் ஒன்றையும் நான் காணமாட்டேன்.

**Meaning**: When my husband is out of sight, I use to muse over his shortcomings; but the moment I sight him, I forget his shortcomings, even as the eyes do not see the decorating pencil while the latter is in the act of decorating.

**15.** காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை

*Kanungal Kanen tavaraya; Kanakkal*
*Kanen tavarallavai.* —*Kural : 1286*

என் கணவரை யான் காணும்போது குற்றமானவை ஒன்றையும் நான் அறியேன்; அவரைக் காணாதபோது குற்றமல்லாதவற்றை அறியவே மாட்டேன் (அவர் குற்றத்தையே காண்பேன்).

Meaning: When I see him, I do not see his defects. When I do not see him, I do not see anything but his defects (i.e. I see only his defects).

**16.** மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

*Malarinum melithu Kamam; Silar athan*
*Sevvi Talaippaduvar.* —*Kural : 1289*

காம இன்பம் மலரைக் காட்டிலும் மென்மையுடையதாக இருக்கும். அங்ஙனம் அது மென்மை யுடையதாய் இருத்தலை அறிந்து அதன் நல்ல பயனைப் பெறக்கூடியவர்கள் உலகத்திற் சிலரே ஆவர்.

Meaning: Amour is more delicate than a flower; knowing its nature as such, only very few people in this world manage to get good results from it.

17. உப்பமைந் தற்ருல் புலவி அதுசிறிது
மிக்கற்ருல் நீள விடல்.

*Uppamainthatral pulavi ; athu sirithu*
*Mikkatral nila vidal.* —*Kural : 1302*

ஊடல், உணவு வகைகளுக்குச் சுவை தரும் உப்புப் போன்றது. அவ்வூடலை நாம் சிறிது அதிக நேரம் நீட்டித்தோமாஞல் உப்பு அதிகப்பட்டு உணவு சுவைகெட்டுப் போவது போல் இல்வாழ்வு பயனற்றதாகிவிடும்.

Meaning : Even as salt is added to increase the taste of the food, so also sportive tussle is indispensable for love affairs ; and again even as excess of salt spoils the taste of the food so also elongation of the sportive tussle mars the joy of love.

18. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனுக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

*Immaip pirappil piriyalam enrenal*
*Kannirai nir kondnal.* —*Kural : 1315*

இந்தப் பிறவியில் நான் உன்னை விட்டுப் பிரியவே மாட்டேன் என்றேன். அப்படியாஞல் மறு பிறவியில் பிரியக்கருதுகின்றீரோ என்று பிணங்கித் தன் கண்கள் நிறைய நீரைப் பெருக்கிஞள்.

Meaning : I told her : "I will not part with you in this birth." She retorted : "Does it mean that you will part with me in the next birth ?" and cried and shed tears.

19. உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

*Ullinen enren ; matru en maranthir enrennai*
*Pullal pulathakkanal.* —*Kural : 1316*

பிரிந்திருந்த காலத்து 'நான் உன்னை நினைத்தேன்' என்றேன். அப்படியாஞல் 'என்னை நீர் மறந்தீரோ,

மறந்தாலல்லவோ நினைத்திருக்க வேண்டும்' என்று சொல்லி முன் தழுவுவதற்கு இருந்த அவள் அதைவிட்டு ஊடல் கொள்ள லாயினுள்.

**Meaning:** I told her: "When I was far away separated from you, I remembered you". She retorted: "Only after forgetting one remembers another. So you forgot me, is it not?" So saying, she who intended to embrace me, did not do so, but picked up a quarrel.

**20.** **ஊடலில் தோற்றவர் வென்ருர், அதுமன்னும்**
**கூடலில் காணப் படும்.**

*Udalil thotravar venrar; athu mannum*
*Kudalil kanappadum.* —*Kural : 1327*

இன்பம் நுகர்தற்குரிய இருவருக்குள் நிகழும் ஊடலில் தோல்வியுற்றவரே வெற்றிபெற்றவராவர். இவ்வுண்மை அப்போது தெரியக்கூடாதிருப்பினும் அவர்கள் சேர்ந்து இன்புறும் போது நேரில் கண்கூடாக அவர்களே அறிந்து கொள்ளுதல் கூடும்.

**Meaning:** Those who are vanquished in 'love-quarrel' ultimately win; this will be evident when they subsequently join together.

**21.** **ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்.**

*Uduthal kamathirku inbam; atharkinbam*
*Koodi muyangap perin.* —*Kural : 1330*

காமத்திற்கு இன்பம் தருவது ஊடுதலே ஆகும். அவ்வூடுதல் தீர்ந்தபின் காதலனும் காதலியும் கூடித் தழுவப் பெற்ருல் அஃது அக் காதலை நிறைவேற்றும் இன்பம் ஆகும்.

**Meaning:** 'Love-quarrel' enhances conjugal pleasure. This attains consummation when, subsequent to the 'love-quarrel', the lovers embrace each other.

# PEACE INVOCATION

—::—

**Mahabaratha**

Prayer to Vinayaga who is the deity of courage and determination and also protects those who offers prayer unto him from obstacles and showers blessings upon them to be a success in all their activities and undertakings for the purpose for which the prayer is offered that is the reason for offering prayer to Vinayaga. There is a legend and also in the Vinayagapuranam which states that a boon was given to Vinayaga by the supreme Lord Siva that every one who starts any activities must offer prayer to Vinayaga to achieve success in such activities. He did not exclude himself; so one day when got on to his chariot to destroy a Demon who unrighteous for righteous to prevail he did not offer prayer to Vinayaga and failed to keep up to his granting at the boon his chariot axle broke. There is a song relating that which is as follows:

*Kaithalaniraygani Appamodaval Pori*
*Kappia Karimugan Adipeni*
*Katridum Adiavar Puthieluraypavar*
*Karpagamena Vinai Kadithegum....*

**Planting of the sacred tree Arasu**

The significance of planting the tree denotes the trinity Brahma, Vishnu, Siva. Brahma the creator, Vishnu the Sustainer and Siva the Destroyer to perform a Marriage ceremony the officiating priest has to create Divine atmosphere in the place of marriage that is why all Gods, Devas and Planets are placed as symbols. The Arasu tree represents the trinity, the seeds the planets, the vessels the consorts of the trinitv Parvathi. Luxmi and Saraswathi. Lord

Muruga after destroying Sura Padman who is Demon and saved all the Devas from his cruel treatment because of the Power he got as a boon from Lord Siva after a vigorous Tapas. Indra gave Lord Muruga his daughter Deivayanay to marry. Lord Muruga married Deivayanay in Thiruparankunram in the presence of the trinity. Nakkirar's (Pamalar) Song garland states in the Thirumurugatruppadai.

**Nalangu**

The significance of Nalangu is to purify the bridal couple from all past vice if any in their Bachelor life, and seat them in the Divine canopy (pandal) because they are going to be future creators in the divine aspect as Meenakshi-Sundaraser, and in the material aspect as man and wife. Like Somasundarar and Thodathagay to begin household activities as householders in the material world and lead life as true householders as quoted in the Thirukural.

*Who shares his Meal with others, while all guilt he shuns*
*His virtuous line unbroken through the ages run*

His descendants shall never fail who, living in the domestic state, fears vice (in the acquisition of property) and shares his food with others. Note Paragraph in this book denoting to attire.

**Kanganam**

Kanganam is cotton dipped in turmeric powder and tied with a dry turmeric stick, which the officiating priest ties to right hand of the bridegroom, and the bridegroom ties to left hand of the bride that significance is that all the three of them take a vow that they will not divert from the principles and rules pertaining to the marriage ceremony laid down in the shastras (e.g. scriptures) from beginning

to end of the ceremony. Thereafter prayer is to be offered to all deities and untie the Kanganam. Note verses in the beginning of this book paragraph 5.

**Lighting the fire for ablution**

This signifies the essential elements for all aspects to live in the material world eg. Fire (Sun), Moon, Water, Sky, Air, the bridal couple light the fire after the officiating priest chants the sacred mantras in paragraph 8 and take vows that they will not divert from the righteous path of household activities of rules laid down in the scriptures (Manusmriti). The Fire must constantly flame until the marriage ceremony is completed and finalised.

**The handing over of the Bride to the Bridegroom**

The bride's parents hand over the bride to the bridegroom in the presence of the audience and all the Gods, Devas and Planets as witness.

**Tying of the Nuptial cord and sacred emblem**

The bride is seated on the right side of the bridegroom before the Nuptial cord is tied signifying them to be in the Divine aspect as Paramasivan and Parvathi—the divine father, mother of the Universe and also the creator of the universe as cosmic and power Siva-Sakthi. After tying of the sacred Nuptial cord and emblem the Thali they are made to change places. The bride is accepted as the half of the bridegroom and seated in the left side. In the heart of her husband thereafter there will be no place for any other women excepting her. Since the two bodies become one as (Arthanarisvarar) the bridal couple circumambulate the flaming fire and takes a vow that they will not part from one another until death departs them and during

the course of their household activities and life long. They will not violate the rules of marriage; the fire being their witness. If they do violate and disregard their vow, they must be punished by burning into ashes in the fire. Thereafter the flower garland is exchanged. This signifies community of property and lead a happy and prosperous married life. The bridegroom puts the ring called (mingie) into the toe of the bride placing her foot on the rock. There is a story in ancient times. There was a pious lady known as Ahalya who was a Rishi's (Gouthama Rishi) wife. She was cursed by the rishi for violating the marriage rules and getting her chastity polluted that she must become a rock. She begged the rishi to pardon her-give her reprieve. The rishi pardoned by saying that when the Foot of the righteous Rama who is the incarnate of Lord Vishnu touches her she will get her form back as a woman. That is the only time a husband touches his wife's foot and prostrates to her asking her not to tread on to the path as Ahalya but to be firm as Arundati the noblest, chaste and virtuous lady and be guided by the revered Arundati who was given the boon to be like a shining star by her husband Vasishta for being a most passionate and possessing all the qualities a noble wife should possess. The husband asks her to be like the revered Arundati. Lord Muruga performed the above act when he got married to Sri Valli in Thiruchendur. There is a verse in the Kandaranupoothi by Arunagiri which is as follows: Verse 22.

My Lord! Thou art the Supreme Head of this World and the lord of Devas, thou doth pay homage to the holy feet of thy consort Sri Valli, with her long and lovely tuft of hair (for Her sincere and steadfast devotion to thee). More bounteous is thy grace towards me. I look upon thee (in thought and feeling) as the mighty meru mountain

tall and majestic and as Kumaran the daring good of eternal youth. What penance have I performed to deserve this privilege to worship thy sacred feet!

The husband tells his wife to be steadfast as a rock to protect her chastity and not to be mislead by anyone with the thought evil or vice, and also warns her if a rock is cracked it cannot be mended-even if mended it will always be weak. There is an interesting story in the Mahabaratha of King Jarasandha who was born as two half babies and made into one baby by joining the two bodies together. The interesting story embodies the important truth that two sundered parts joined together will still remain weak with a tendency to split. Have this in mind and don't let your chastity be polluted. See prayer paragraph 11 verse 1-2-3.

The chastity of fair sex is told by Yudhishtra in the Mahabarata to the Sage Markendeya as follows: What greater wonder is there in this world from the patience and the chastity of woman....? She gives birth to a child after cherishing it in her womb as dearer than life itself. She brings it in the world in pain and anxiety and thence forward her one thought is for its health and happiness. Large hearted and forgiving a woman forgives and continues to love even a wicked husband who neglects, hates and subjects her to all sorts of miseries. How strange? Hearing this sage Markendeya told him a sacred story "read Mahabarata Chapter 37": *"I am no crane"*.

**The dot on the forehead**

The dot on the forehead signifies the bride has to be auspicious at all times like Arundati. The bridegroom places the dot after tying the sacred nuptial cord the Thali around the bride's neck knotting thrice which signifies the

trinity Brahma, Vishnu, and Siva and their consorts Saraswathi, Luxmi and Parvathi who become the half of the trinity to protect her always. Under no circumstance should she remove the sacred cord from her person even when bathing. The red dot should always be on her forehead. It has to be placed exactly in the centre of the two eyebrows because the eye of knowledge and fire is situated at that spot, to destroy all evil and vice thoughts of her admirer, other than her husband. That is why it should not be removed until her husband parts from her through destiny or fate by Death. Her husband is her Lord and Master; she only has to pray to husband. Thiruvalluvar the divine poet says in the Kural:

*No God adoring, low she bends before her lord;*
*Then rising, serves; the rain falls instant at her word.*

If she, who does not worship God, but who rising worships her husband, say "Let it rain" it will rain. Also check paragraph 12 Mantra in this book.

**Tying of Pattam (e.g. throning the bride)**

The mother-in-law of the bride has to tie a hot piece of golden plate on the forehead of the bride as well as the sister-in-law and the maternal uncle.

1. The mother-in-law dethrones herself as a queen of the household activities and enthrones her daughter-in-law to take her place, the sister-in-law gives up her position as a minister to her mother and becomes the minister of her sister-in-law the bride.

2. The maternal uncle who was the best man at his sister's marriage was ringed by his brorher-in-law to be the guardian of his daughter. If any by the grace of the supreme creator and also promised to give her hand to him in

marriage, it happens that the maternal uncle fails to marry the girl, he foregoes his rights by tying the Pattam.

**Circumambulation of the sacred fire**

Circumambulation of fire defines the married couple to abide by the rules of law and principles of marriage laid down according to customs and traditions in the scriptures.

First round the changing of flower garland (community of property).

Second round the married couple taking the vow to lead a virtuous and chaste married life.

Third round the bridegroom fits the ring on to the finger of his brother-in-law as guarantee giving him the ring to be the guardian of his offspring's and promise to give the hand of his daughter in marriage to him.

## வாழ்க காதல்!

ஆண்பெண் வாழ்க்கை அன்பு வளர்க்கை
பெண்மையில் முன்னும் ஆண்மை அதிகம்
பெண்சொற் கேட்டல் பெரிய தவமே
பெண்மையில் தாய்மை தாய்மையில் இறைமை
காதல் பெருக்கம் தாய்மை அன்பே
தாய்மை அன்பே இறைமைக் கருணை
வாழ்க பெண்மை! வாழ்க காதல்!

— பெரியார் திரு. வி. க. அவர்கள்

## Let Love Flourish!

Aann Penn Vazhkkai anbu valarkkai;
Pennmayil munnum Aannmai athigam;
Penn sorkettal peria tavame;
Pennmayil taimai; taimayil iraimai;
Kathal perukkam taimai anbe;
Taimai anbe iraimaikkarunai;
Vazhga Pennmai! Vazhga kathal!

— *Thiru Vi. Ka.*

For a man and a woman to live together is to foster love;
Great indeed is the heroism that a woman thinks of!
It is a blessing to take the advice of a woman.
Womanhood contains Motherhood; Motherhood contains divinity.
It is only love that develops into motherly affection.
Mother's affection is nothing but God's Grace.
Long live womanhood! Let love flourish!

marriage, it happens that the maternal uncle fails to marry the girl, he foregoes his rights by tying the Pattam.

**Circumambulation of the sacred fire**

Circumambulation of fire defines the married couple to abide by the rules of law and principles of marriage laid down according to customs and traditions in the scriptures.

First round the changing of flower garland (community of property).

Second round the married couple taking the vow to lead a virtuous and chaste married life.

Third round the bridegroom fits the ring on to the finger of his brother-in-law as guarantee giving him the ring to be the guardian of his offspring's and promise to give the hand of his daughter in marriage to him.

## வாழ்க காதல்!

ஆண்பெண் வாழ்க்கை அன்பு வளர்க்கை
பெண்மையில் முன்னும் ஆண்மை அதிகம்
பெண்சொற் கேட்டல் பெரிய தவமே
பெண்மையில் தாய்மை தாய்மையில் இறைமை
காதல் பெருக்கம் தாய்மை அன்பே
தாய்மை அன்பே இறைமைக் கருணை
வாழ்க பெண்மை! வாழ்க காதல்!


— பெரியார் திரு. வி. க. அவர்கள

## Let Love Flourish!

Aann Penn Vazhkkai anbu valarkkai;
Pennmayil munnum Aannmai athigam;
Penn sorkettal peria tavame;
Pennmayil taimai; taimayil iraimai;
Kathal perukkam taimai anbe;
Taimai anbe iraimaikkarunai;
Vazhga Pennmai! Vazhga kathal!

— *Thiru Vi. Ka.*

For a man and a woman to live together is to foster love;
Great indeed is the heroism that a woman thinks of!
It is a blessing to take the advice of a woman.
Womanhood contains Motherhood; Motherhood contains divinity
It is only love that develops into motherly affection.
Mother's affection is nothing but God's Grace.
Long live womanhood! Let love flourish!



PRINTED AT
WARDHA PRESS, MADRAS-2 (S. INDIA)